# பகுத்தறிவு



கலை இலக்கிய
சமூக சீர்திருத்த இதழ் -/85

பகுத்தறிவியக்க வெளியீடு

சிறந்த தேநீரையே அருந்தி
நிறைந்த இன்பத்தை அடையுங்கள்!

மணம் குணமான தேயிலை பாவித்து
பணம் வீண்செலவாவதைத் தடுத்துக்கொள்ளலாம்!

# TEALET'S

PURE

# BANDARAWELA TEA

என்று கேட்டு
வாங்கி
அருந்தி
இன்புறுங்கள்

சீனி இல்லையே!
கருப்பட்டி கூட
உருப்படியாக இல்லையே!

என்ற கவலையும் உங்களுக்கு வேண்டாம்.

வெகுவிரைவில் உங்கள் கைகளுக்கு வர இருக்கும்

# CHARLY'S INSTANT TEA ஐ

வாங்கிப் பாவிக்கலாம்

சுடுநீரிலோ குளிர்நீரிலோ
உடன் கரையும்

சீனி, தேயிலை, பால்மா யாவும் சேர்ந்த பவுடர்

No. 35, POONAGALLE ROAD,
BANDARAWELA.

அறியாமை அவ்வளவு இழிவு அன்று
அறியமனமில்லாமைதான் மிக மிக இழிவு.

பகுப்பு : 1.
அறிவு : 3.

1974, செப்தம்பர்—
ஒக்தோபர்.

# மனிதராகவே வாழவேண்டும்

மனிதர்கள் எல்லோரும் சம வாய்ப்போடு வாழக்கூடிய பகுத்தறிவுச் சமுதாயம் அமைவதற்கு எவ்வளவு காலம் எடுக்குமோ கூறமுடியாது.

எனவே அந்தப் புனித காலம் வரும்வரைக்கும் எப்படியாவது வாழட்டும் என்று வாழாவிருப்பது பொருத்தமான செயல் அல்ல. "மனிதன் வாழுகிருன்" என்று மனச்சாட்சி நம்பும்படியாக வாழ முடிய வேண்டும்.

உலகில் வாழும் மக்கள் அனைவரும் வர்க்கம், மொழி, மதம், சாதி என்று பிரிந்து சில்லறைப்படாமல் ஒன்றே குலம் என்று வாழுவதாக இருந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்! ஆனல் நடைமுறையில் அப்படியில்லை. பெரும்பாண்மை உண்டு. சிறுபாண்மை உண்டு, சிறுபாண்மையினுள்ளும் சிறுபாண்மையினருண்டு.

காய்கறித் தோட்டத்துக் கன்றுகள் போன்று கத்தரிக்காய்ப் பாத்தி ஒன்று, வெண்டைக்காய்ப் பாத்தி ஒன்று, பாவற்காய்ப் பாத்தி ஒன்று, மிளகாய்ப் பாத்தி இப்படி சிறு சிறு பிரிவுகளாக நாம் வாழுகின்ருேம்.

தோட்டத்தைப் பராமரிப்பவன் அங்குள்ள கன்றுகளின் வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் தன் கவனத்தைச் செலுத்திக்கொண்டேயிருப்பான். மருந்து தேவைப்பட்டபோது அடிக்க வேண்டும். உரம் தேவைப்பட்டபோது இடவேண்டும். நீர் தேவைப்பட்டபோது விடவேண்டும்.

மருந்து அடிக்கவேண்டும் என்பதற்காக ஏதோ ஒரு கிருமி நாசினியை எடுத்து அத்தோட்டத்திலுள்ள எல்லாக் கன்றுகளுக்கும் ஒரே மாதிரியாக அடித்துவிடுவதும் உரம் இடவேண்டும் என்பதற்காக ஒரே ரக உரத்தை முழுத் தோட்டத்திற்குமே இட்டு

---

**பகுத்தறிவில் வரும் படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பாளிகள் ஆவர்.**

விடுவதும், நீர் தேவை என்பதற்காக காலநேரம் உணராது நீரை இறைப்பதும் கண்மூடித்தனமாகும்.

இறுதியில் அவனுக்கு அத்தோட்டத்திலிருந்து பயனேதும் கிட்டாது. ஆனுல் கத்தரிக்கன்றுக்கு எந்த உரம் தேவை, எந்த அளவில் எப்போது நீர் தேவை என்பதை அவன் நன்ருக அறிய வேண்டும். அதே போல் வெண்டைக் காய்க்கும், பாகற் காய்க்கும், மிளகாய்க்கும், சுண்டங்காய்க்கும்கூட தனித்தனியான பரிசோதனைகள் செய்து உண்மையை அறிதல் வேண்டும். விஞ்ஞான ரீதியானதும், வளர்ச்சிக்குத் துணையானதும் அதுவே. தோட்டத்தின் ஒவ்வொரு காய்கறி இனத்தினதும் வளர்ச்சி கருதும் தோட்டக்காரன், ஒவ்வொரு பாத்தியிலிருந்தும், ஒவ்வொரு இனத்திலிருந்தும் ஓரிரண்டு காய்களைப் பறித்துப் பரிசோதனைக்கு எடுத்துக்கொள்வான். ஒவ்வொன்றிற்கும் ஏற்ற வகையில் பராமரிப்பும் செய்வான்.

மூவர் அடங்கிய தொகுதி நிர்ணயக்குழு ஒன்றை அரசாங்கம் நியமித்ததை அறிந்தோம். சிங்களவர் ஒருவர், தமிழர் ஒருவ முஸ்லீம் ஒருவராக தேர்ந்து எடுத்ததைப் பார்க்கும்போது உள்ளம் பெருமகிழ்ச்சியடைகிறது.

கத்தரிக் காயின் நோயைத் தீர்ப்பதற்கு, கொத்தவரைக்' காயில் ஆராய்ச்சி நடத்துவதற்கும், வெண்டைக்காயின் வருத்தத்தை ஆராய்வதற்கு, சுண்டைக்காயைப் பரிசோதிப்பதற்கு, அரசாங்கம் தயாரில்லை என்பதை அறிந்து "பகுத்தறிவும் பூரிப்படைகிறது.

மட்டக்களப்பு வாழ் முஸ்லீம்களுக்கு இம்முறை பிரதிநிதித்' துவம் கொடுக்க சனநாயகத்திற்கு இயலாமற்போனமையும்,

நியமன உறுப்பினர்கள் இல்லாதிருக்கப் போகும் எதிர்கால நாடாளுமன்றத்தில் சிறுபாண்மைத் தமிழர்களுக்கு எங்கே இடங் கிடைக்கப் போகிறது என்கின்ற நியாயமான ஏக்கத்தினையும்,

அறுபத்தொன்பது வீத சிங்கள மக்கள் எண்பது வீத நாடாளுமன்ற இடங்களை வைத்திருப்பதால், சிறுபாண்மையினங்களுக்கு நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் போதவில்லை என்ற குறைப்பாட்டையும்,

புதிய தொகுதி நிர்ணயக் குழு தீர்த்து வைக்கும் என்று நம்பும்படியாக உள்ளது.

பகுத்தறிவுச் சமுதாயம் ஒருநாள் உருவாகும்!

# அறிவியக்கப் பேரவை நிறைவேற்றிய தீர்மானங்கள்

[புதுடில்லி சர்வகலாசாலைப் பேராசிரியர் டாக்டர் சாலை இளந்திரையன் அவர்களை அமைப்பாளராகக் கொண்டு சிறப்புடன் இயங்கிவரும் அறிவியக்கப் பேரவை தனது இரண்டாவது ஆண்டவையில் நிறைவேற்றிய தீர்மானங்கள் கிழே தரப்பட்டுள்ளன.

மனிதர்களை மனிதர்களிடமிருந்து பிரிப்பதற்கும், கெடுப்பதற்குமே வழி வகுத்த காட்டுமிராண்டித்தனமான அமைப்புக்கள், சம்பிரதாயங்களை வருங்கால இளைஞர் சமுதாயம் தொடரக்கூடாது—செம்மறி ஆடுகளைப் போல் பின்செல்லும் வழக்கத்தை நிறுத்தி—சிந்தித்து முன்னேற வேண்டுமென நாம் கருதுவதால் இதை இங்கு தருகிறோம்.—ஆ-ர்]

1. ஓரளவு பொருளாதார வசதி பெற்று, போராட்டம் நடத்தும் வாய்ப்பும் வலிமையும் உடையவர்களாக இருப்பவர்கள். இந்த நாட்டில் பட்டினி எல்லையில் வாழும் 22 கோடி மக்களின் நிலையை உயர்த்தும் போராட்டங்களையே முதலில் நடத்தவேண்டும்.

2. நாட்டில் உள்ள நிலம் அனைத்தையும் தொழில்கள் அனைத்தையும் உடனடியாக நாட்டுடைமை ஆக்கவேண்டும்.

3. சாதி முறையை ஒழிக்கும் முதல் நடவடிக்கையாக, யாரும் தங்கள் பெயருக்குப் பின்னால் சாதிப் பெயர்களைச் சேர்க்கக் கூடாது என்று சட்டம்செய்ய வேண்டும்; அதுபோலவே, சாதிப் பெயரால் ஊரோ, தெருவோ மற்றப் பொது நிறுவனங்களோ சங்கங்களோ வைக்கக்கூடாது என்றும்சட்டம் செய்யவேண்டும்.

4. கலப்புமணத் தம்பதிகளுக்குச் சமுதாயத்தில் ஆதரவும் மதிப்பும் ஏற்படும் வகையில், அரசு அலுவல்களில் அவர்களுக்கே முதல் இடம் கொடுக்க வேண்டும். அவர்களின் குழந்தைகளுக்கும் அதே சலுகை வழங்க வேண்டும்.

5. மனிதருக்கு மனிதர் வேறுபாட்டு உணர்ச்சியை உண்டாக்கும் (விபூதி, நாமம், சிலுவை, தொப்பி முதலான) மதச் சின்னங்களை அணிந்து கொண்டு யாரும் பொது இடங்களுக்கு வரக்கூடாது என்று தடுக்க வேண்டும். எதிரெதிரே உள்ள இரண்டு வீடுகளுக்கு நடுவே உள்ள பொதுத் தெருவில் அந்த இரண்டு வீட்டாரும் ஒப்புக்கொள்ளக் கூடிய நிகழ்ச்சிகளே நடைபெற வேண்டும்,—இருவரில் ஒருவருக்குப் பிடிக்காத நிகழ்ச்சி எதுவும் அங்கே நடைபெறலாகாது என்று சட்டம் செய்ய வேண்டும்.

6. ஒவ்வோர் ஊரிலும், இடுகாடும் சுடுகாடும் ஒன்றே ஒன்றுதான் இருக்கவேண்டும். மத, இன வேறுபாடு இன்றி, எல்லா மக்களும் அங்கேயே தங்கள் பிணங்களைப் புதைக்கவோ எரிக்கவோ

வேண்டும் என்று சட்டம் இயற்ற வேண்டும்.

7. தீண்டாமை ஒழிப்புச்சட்டம் சில இடங்களில் இன்னும் சரிவர அமுல் நடத்தப்படவில்லை; இதுபற்றி, உடனேயே, மத்திய மாநிலஅரசுகள் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

8. மதச்சார்பற்ற அரசின் அமைச்சர்களும் மற்ற ஊழியர்களும், பொது நிகழ்ச்சிகளில் தேங்காய் உடைப்பது, குத்து விளக்கு ஏற்றுவது போன்ற மதத் தொடர்பான செயல்களில் ஈடு படுதல் ஆகாது.

9. கையூட்டு (லஞ்சம்) பெறுவது மிகப் பெரிய சமுதாயக் கேடாக வளர்ந்துவருகிறது. 'லஞ்சம் கொடுக்காவிட்டால் கல்வி நிலையங்களில் இடம் கிடைக்காது. அலுவலகங்களில் நமது வேலை நடக்காது' என்னும் எண்ணம் மக்களிடையே வளர்ந்து வருகிறது! இந்த எண்ணம் மாறும் வகையிலே, லஞ்சப் பழக்கத்தைத் தடுப்பதற்கு உரிய கடுமையான சட்டங்களை இயற்றி அவைகளைத் திறமையாகச்செயல் படுத்தவேண்டும்.

*

## உணர்ச்சிவயப்பட்டு நிற்கும் தம்பி! உன்னிடம் ஒரு வார்த்தை . . .

இதுவரை காலமும் நாம் எப்படி வாழ்ந்தோமோ அப்படியே இனிமேலும் வாழ்ந்துவிடவேண்டுமென்று நாம் கனவு காணக் கூடாது. எங்களைப் பொறுத்தவரையில் (தி.மு.க.) உங்களுடைய (இலங்கைத் தமிழருடைய) பிரச்சனைகளை ஒரு உள்நாட்டுப் பிரச்சனையாகவே கருதுகின்றோம். நீங்கள் வன்முறைகளைத் தவிர்த்து பேச்சுவார்த்தை மூலமோ அல்லது அகிம்சை வழியில் போராடியோ, அல்லது வேறுவிதமாகவோ உங்கள் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளுங்கள்.

(தமிழ்நாடு துணைச் சபாநாயகர் கணபதி 14.9.74 அன்று இராமகிருஷ்ண மண்டபத்திலாற்றிய உரையிலிருந்து)



# அண்ணாவைக் காண்போமா?

நீரன்

சாதாரண மனிதர்களைப் போல அன்புருவம் அண்ணாவும் ஒருநாள் இறந்துவிடுவார் என்பதைக் கற்பனைகூடச் செய்துபார்க்காது 'அண்ணா' என்ற பகுத்துணரும் பெரியவரின் பொலிவான முகத்தினையே நிமிர்ந்து பார்த்தபடி அடுத்ததாக எந்தச் சொல் அவர் வாயிலிருந்து வரப்போகிறது என்றே எதிர்பார்த்துப் பூரித்திருந்த எமக்கு—

அண்ணா என்னும் அப்புனித சக்தியும் மண்ணாகி மறைந்து விடக்கூடியது என்று வேடிக்கையாக எண்ணினாலும் தூயமனத்திலே தூசிபடிந்துவிடும் என்று எண்ணி அமைதியாக இருந்த எமக்கு—

அன்று 1969ம் ஆண்டு பெப்ரவரித்திங்கள் 2ம் திகதிய வானொலிச் செய்திகள் வானிலிருந்து விழும் இடிகளாக மாறிமாறி ஒலித்து, மனதைக் குளப்பி, மலையொன்று பிளந்து மனக்கண்முன் வீழ்ந்தது போன்று எம்மை உலுப்பி வேடிக்கை பார்த்த நாள்...

அது இரவு பத்துமணி. நாலு மூன்று நண்பர்களாகச் சேர்ந்து அண்ணாவின் உடல் நிலை பற்றி அடுத்த நண்பனுக்கும் கூறிவிட வேண்டுமென்ற அடிமனத்துடிப்பு உந்த நண்பனின் அறைக்குச் செல்லுகின்றோம். தெருவோரத்தில் ஒரு தேவாலயம். அது பூட்டப்பட்டிருப்பது மங்கலான மின்சார ஒளியில் தெரிகிறது.

சரியோ, பிழையோ!

அண்ணாவை அவர்கள் கண்டுகொண்டது அப்படியாயிருக்கலாம்!

ஆற்றாத உள்ளங்கள்—

ஒரு ஐந்து ஆறு பெண்கள். நடுத்தர வயதுள்ளவர்கள். ஒரு பாட்டி, ஒரு சிறுபிள்ளை. கூடி நின்று அண்ணாவின் உயிருக்காக பிரார்த்தனை செய்த காட்சி...

மின்வெளிச்சத்தில் அதைக் கண்ட நாங்கள் உடல் மயிர்களெல்லாம் உயர்ந்து நிற்க... கண்கள் கலங்கி...

---

"உரிமையிழந்த நாடு உயிரற்ற என்புக்கூடு'

—அண்ணா.

---

என்ன இது?

அலைகடலுக்கப்பால் ஒரு அரசியல்வாதி இறக்க இருப்பதற்கு தலைவிரிகோலத்தில் தாய்க்குலம் அழமுடியுமா?

சிறுவயதில் குரும்பட்டியில் தேர்கட்டி, இழுத்து விளையாட்டுக்காட்டிய அண்ணன்—நீராட்டுவதற்கு நீரிறைத்துவிட்ட பெரிய அண்ணன் — பெற்றவள் தலைவாரிப் பொட்டிட்டுப் புறப்படுத்திவிட கைப்பிடித்துக் கூட்டிச் சென்று பள்ளியில் விட்டுவிட்ட பாசப்பிணைப்பின் பொன்னுருவம்—இறந்துவிடப்போவது போன்று அவர்கள் கருதும்படி அவர்களுக்குள்ளேயே இருந்து ஊற்றெடுத்து உயர்ந்து நின்ற சக்தி எது?

'அன்பிலார் எல்லாம்
தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு'

என்று வள்ளுவர் விளக்கும் அன்பா? இல்லை அண்ணா என்று புதிய ஒரு பிணைக்கும் சக்தியா?

வட்ட முகம், வடிவான உள்ளம், கண்ணில் பட்டவர்களையும், காதால் கேட்டவர்களையும், அலைகடலுக்கப்பால் வாழ்ந்த அப்பாவித்தமிழர்களையும் அப்படியே கவர்ந்துவிட்ட தெளிவான அறிவின் இருப்பிடம், காவிபடிந்த பற்கள் ஆனால் காவியினுள் ஒளிந்துகொண்டு கபடநாடகமாடிய வேடதாரிகளை வெளிக்கொணர்ந்து சந்தியில் நிறுத்தி நிற்கவைத்த திண்மையான தன்மை. மூக்குத்தூள் ஏந்திய கை—முன்னெச்சரிக்கையான சிந்தனை—ஒற்றைத் தோளுக்கு ஒரு சால்வை—இதுதான் அந்த அரும்பெரும் தத்துவத்தின் அழகிய எழிய தோற்றம்.

காஞ்சிபுரத்திலே நடராஜன் தம்பதிகளின் மகனாக 1909-9-15 திகதி பிறந்து, பச்சையப்பன் கல்லூரியிலே படித்து ஒரு எம். ஏ. பட்டதாரியாகி—

அதன்பின் முழுநேர சமூகசீர் திருத்தத்திற்காக தன்னையே தந்து எம்மிடையே புதுப்புது

---

## ஆகமம் வீழ்க . . . !

அன்று—
ஆலயப் பிரவேசம்
என்றதும்
ஐயோ...!
ஆகமம் என்னுவது...?
என்ற அர்ச்சகர்
இன்று—
அதிகரித்துவிட்ட
வருமானம் கண்டு
அகமகிழ்கிறார்.

* * *

## சாதி வீழ்க . . . !

எழியவனோடு
ஓடிப்போனவள்
என்று
என்னை ஒதுக்கிவிட்ட
என்
ஏழைப் பெற்றோர்
'நாங்கள்'
என் வீட்டைக்கடந்து
போகையில்
என் 'செழுமை' கண்டு
உள்ளம் பூரித்து
பெருமூச்சு
விடுகின்றனர்.

—எஸ். பி. கே.

உணர்வுகளையும், ஆற்றலையும், மனத்துணிவையும் புகுத்தி—

சாதிக்க வேண்டியவற்றைச் சாதித்தும் விட்டார் அண்ணா.

உள்ளூராட்சி மன்றமொன்றில் எழுது வினைஞராக வாழ்க்கையை ஆரம்பித்து பின்னர் பள்ளியாசிரியராகிய அண்ணா தமிழ்பேசும் உலகுக்கே ஆசிரியராகி—அறிஞராகி—அமரரும் ஆகிவிட்டார்.

சிந்தனைப் புரட்சியாளரும், பகுத்தறிவுவாதியுமான ஈரோடு பெரியார் கொடுத்த தொடக்க அறிவோடு பொது வாழ்வைத் தொடங்கி தொட்ட தொழில் எல்லாத்திற்கும் புனிதம் சேர்த்து புனிதமான பெயரையும் நிலைக்கச் செய்துவிட்டு சென்றுவிட்டார்.

எந்தத் துறையில் ஈடுபட்டாரோ அந்தத் துறையில் நிகரற்ற புலமையை எய்தி அத்துறையில் இருந்து வந்த பழைய வழக்கங்களை மாற்றி புதுமரபை ஏற்படுத்தி அதற்குரிய தெளிவான விளக்கத்தையும் மக்களுக்குக் கொடுத்து அதையே ஏணியாகவும் வைத்து தான் எண்ணிய இலக்கை அடையும் ஆற்றலுக்கும், மரபுக்கும் முன்னோடியும் அண்ணாதான்.

கம்பராமாயணமும், பெரிய புராணமும் ஒரு புதிய புரட்சிக் கோணத்திலிருந்து ஆராயப்பட்டது அண்ணாவாலாகும். தெய்வ நூல் என வர்ணிக்கப்பட்டும், அதன் பாத்திரங்கள் கடவுள்களாக்கப்பட்டும், கேள்விகேட்பாரும், எதிர்ப்பாரும் அற்று இருந்தபோது கம்பரசம், மாஜிக் கடவுள்கள் என்பனபோன்ற நூல்களையும், திரைப்படக் கதைகளையும் எழுதி ஒரு தர்க்கரீதியான சிந்தனைக்கு தீவிரமான ஒரு அத்திவாரமிட்டுத் தந்துவிட்ட பெருமையும் அவரைச் சாரவேண்டியதே!

ஆரியர் ஆதிக்கம் செலுத்தி அரசோச்சுவதற்கு சுலபமாக இருப்பதற்கென்று அவர்களாலேயே வகுக்கப்பட்ட சாதிகள் முப்பது, நாற்பதுவரையில் இருந்தன. அதோடு கலைஞர்கள் மேல்மட்ட மனிதர்களுக்கு 'கூத்தாட்டி'களாகவும் தென்பட்டனர். இவர்கள் எல்லோரும் அரசியலுக்கு லாயக்கற்றவர்களாக— நாட்டைச்சீர்திருத்தி வழிநடத்தத் தகுதியற்றவர்களாக மேல்தட்டு முதலாளிகளால் கணிக்கப்பட்டு 'அண்டிப்பிழைப்போர்'— என்றவகையில் கணிக்கப்பட்டு வந்த அநாகரிகக் காலகட்டம் அது.

அப்போது அரசியலுக்கு தமிழ் 'அலர்ஜிக்' ஆக இருந்த நிலையை மாற்றி செந்தமிழில் வழமுண்டு என்பதை தான் அரச பணியேற்றதும் தமிழிலேயே அரசின் கடமைகளையும் செய்து காட்டி அதிலும் அவரே முன்

---

முதலமைச்சராக இருந்த இராசாசி குலத்தொழில் கல்வித்திட்டத்தைக் கொண்டு வந்தபோது அண்ணா அவரைக் கேட்டகேள்வி சிரிக்கவும், சிந்திக்கவும் வைப்பது.

அது இதுதான்.

திருடன் மகன் திருட்டுத் தொழில் கற்க வேண்டுமா?

---

## ஏழில் செவ்வாய்

முத்தம்மாவுக்கு
முப்பத்திரெண்டு வயது.
பத்துக்கலியாணங்கள்
பாதியில் குழம்பிப் போச்சு...
எட்டுக் கலியாணம்
எழுத்தில் குழம்பிப்போச்சு...
சில மூன்று திருமணங்கள்
சீதணத்தில் குழம்பிப்போக..
நாலு கலியாணம்
அவள் பிறந்த
நாள் சரியில்லையெண்டு...
ஏழில் செவ்வாய்க்காரி
ஏனிந்த வம்பு என்று...
ஏழுபேர் சொல்லியாச்சு
எல்லோரையும் கூட்டி
முப்பத்திரெண்டுபேர்கள்
எல்லாரும் 'ஆம்பிளை'யளை
என்று தான்
நான் எண்ணியிருந்தேன்.
முத்தம்மா சொல்லுகிறுள்
அவர்களுக்கு—
ஆளுக்கொரு
மாப்பிள்ளை
பார்க்கவேண்டுமாம்!

—நீரன்

ளுேடியாக விளங்கியது மறக்கக் கூடியதா?

முன்னைநாள் நீதிபதியும், மேல்மட்டத்து அரைகுறைத் தமிழ் பேசும் முதலாளியும், கம்பனி அதிபர்களும் அரசியலை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த வேளையில் அரசியலை அப்படியே பறித்தெடுத்துப்பாமரன் கையில் கொடுத்து மகிழ்ந்த சமதர்ம வாதி அண்ணுவேதான்!

சிந்தனையறிவுள்ளவர்கள் எத்துறையிலிருந்தாலும் எத் தொழில் புரிந்தாலும் வேண்டிய திறமையிருப்பின் அரசியலுக்கு லாயக்குள்ளவர்களே! என்ற நிலை அண்ணுவால் உருவாக்கப்பட்டது. அண்ணு இப்படியான மரபைத்தொடக்கி வையாதிருப்பின் இன்று ஒரு கலைஞர் ஆட்சி செய்யவும், ஒரு நடிகர் பலம்வாய்ந்த மாற்றுக்கட்சி (எதிர்க்கட்சியை மாற்றுக்கட்சி யென்றழைப்பதே சரியெனக்கூறி அப்படி முதலில் அழைத்தவரும் அண்ணுவே) யை வழிநடத்திச் செல்லவும், ஒரு கவிஞர் வேறு ஒரு பலமான கட்சிக்காக வாதாடவும் முடியுமா? ஊதியத்திற்காக ஒருவன் பார்க்கும் தொழிலைக்கொண்டு அவன் அறிவையும் ஆற்றலையும் கணித்தல் பகுத்தறிவல்லவே!

அண்ணு சமூக சீர்திருத்த வாதியல்லவா? சாதி சமயக் கொடுமைகளால் மக்களில் ஒரு சாரார் நசுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு, தேசியச் செல்வங்களை முழு உரிமையுடன் அனுபவிக்காது வாழ்ந்த காட்டுமிராண்டி வாழ்க்கையைப் பார்த்து வெட்கப்பட்டார். தீண்டாமை என்ற கொடிய வழக்கத்தை விரட்டியடிக்கவும், ஆரிய செல்வாக்கினுல் ஏற்பட்ட பிராமண ஆதிக்கத்தையும் தகர்ப்பதற்கென அவர் கலப்புத்திருமணத் திட்டத்தையும், சீர்திருத்தத் திருமணத்தையும் முன்னின்று ஊக்குவித்து ஒரு புதுமரபைத் தொடக்கிவைத்தார்.

இவர் ஆட்சிக்கு வந்தபின் ஆரம்பித்து வைத்த கலப்புத் திருமணம் செய்தவர்க்குத் தங்கப் பதக்கம் பரிசளிக்கும் திட்டம் இன்றும் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றது.

இன்று அண்ணு இருந்திருந்தால்...! என்று சற்றுக் கற்பனை செய்து பார்க்கத் தலைப்பட்டோ

மாகில் எமக்குக்கிடைக்கக் கூடிய பதில் சுலபமாகக் கிடைத்து விடும்.

ஆனுல் இன்று நடப்பதை அண்ணு எங்கோ இருந்து பார்க்கின்ருர் என்று கற்பனை செய்து பார்ப்பின் எமக்கு எத்தனையோ சிந்தனைகள், எத்தனையோ மூலைகளிலிருந்து வந்து திக்குமுக்காடச் செய்கின்றன.

இதைச்சற்று அலசுவது கட்டுரைக்குப் பொருத்தமானதேயாகும்.

நாம் எமது பகுத்தறிவுக் கண்ணேட்டத்தையே இங்கு செலுத்துகின்ருேம். பக்கச்சார்போடு கருத்துக்களைத் தந்து பகுத்தறிவை வளர்க்கமுடியாதென்பதே எமது நம்பிக்கை. அம்மாவுக்கு ஒருபிள்ளை மீது வெறுப்பும், மறுபிள்ளை மீது விருப்பும் இருக்க முடியாது. அதுபோல அண்ணுவுக்கும் ஒருதம்பிமீது கூடியவிருப்பும் மறுதம்பிமீது சற்று வெறுப்பும் இருக்கக் காரணமில்லை எமக்கும் அப்படியே!

அண்ணுவின் கொள்கைகளே தம்பியரின் கொள்கைகளோடு ஒப்பிடப்படுகின்றன.

ஒரு தி. மு. க. கூட்டம் நடைபெறுகின்றது. அண்ணுவும் மேடையிலிருக்கின்ருர். ஒரு முன்னணிப்பேச்சாளர் — ஒரு தம்பி ஆவேசமாகப் பேசிக்கொண்டிருக்கின்ருர். அது காங்கிரஸ்காரர்கள் தி.மு.க. வளர்ச்சி கண்டு கையில் அகப்பட்ட ஆயுதத்தையெல்லாம் பண்புமீறி தி.மு.க. வுக்கு எதிராக பாவித்து மனிதனுக்கு பொறுமையைச் சோதித்த காலகட்டம். அண்ணுவின் அர்த்தமுள்ள மொழியில் கூறுவதாயின்— அணையப்போகும் விளக்கு இறுதியாக பெரிதாக சுவாலைவிட எத்தனித்த வேளை— உணர்ச்சிவசப்பட்ட அப்பேச்சாளர் 'காங்கிரஸ் காரர்களுக்கு கல்லால் அடிக்கவேண்டும்' என்று கூறினுரே பார்க்கலாம்! அந்தப் பகுத்தறிவின் பிறப்பிடம் உணர்ச்சிகளை வேண்டிய இடத்தில் வேண்டியபடி கட்டுப்படுத்துவதே அறிவு—பண்பு—என்பதை நன்ருக உணர்ந்திருந்ததல்லவா? அங்கிருந்த அண்ணு உடனே எழுந்துபோய் அங்கு கூடியிருந்த மக்களிடம் அப்படிப்பேசியவர் சார்பில் வருத்தம் தெரிவித்து, அப்பேச்சாளரைக் கொண்டே

---

ஒரு சமயம் ஈ. வே. ரா. பெரியாரவர்கள் வைதீக பிராமணர்களால் தமிழர்களுக்கு நடந்த கேடுகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்.

மேடைக்கு முன்பாக இருந்து பலகேள்விகளை எழுதி எழுதிக்கொடுத்துக் கொண்டிருந்த பிராமணர் ஒருவர் அடுத்த கேள்வியை எழுதிக்கொண்டிருந்தபோது பென்சில் முனை ஒடிந்ததைப் பெரியார் கண்டுவிட்டார்.

உடனே தனது பேனுவை எடுத்து நீட்டி 'ஐயா இதனுல் எழுதுங்கள்' என்ருர்.

வெட்கிப்போன பிராமணர் கூட்டம் முடிந்ததும் பெரியாரைச் சந்தித்துத் தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டாராம்.

---

அச்சொற்றொடரை திரும்பப் பெறவும் செய்தார்.

இதுதான் தலைவனுக்குரிய பண்பு—தகமை—செல்வம்.

'நண்பாற்றார் ஆகி நயமில
செய்வார்க்கும்
பண்பாற்றாராதல் கடை'

பகைமை கொண்டோர் மீதும் பண்போடு பழகுதலே அறிவுடையவர்க்குச் சிறப்பு என்று வள்ளுவர் கூறுவது அண்ணாவை வள்ளுவர் ஆமோதிப்பதாக அமைகிறது.

அண்ணா மறைந்தார். தம்பியொருவன் முதலமைச்சரானான். தலைவன் ஆனான் என்பதே சரி. அண்ணா பெற்றுத்தந்த 'தமிழ்நாட்'டிலே ஒரு மகாநாடு. கருணாநிதியும் இருந்தார். அன்றைய தி. மு. க. வின் பலம் பொருந்திய தூணாகவிருந்த திரு. இராமச்சந்திரன் பேசிக்கொண்டிருந்தாராம். அது முதலமைச்சர் கருணாநிதியின் உயிருக்கு உலைவைக்க யாரோ திட்டம்போட்டிருந்ததாக வதந்தியொன்று வெளிவந்த காலகட்டம். உணர்ச்சி வயப்பட்டு அன்பர்கள் இருந்த சூழ்நிலை. அங்கே பேசிய திரு. இராமச்சந்திரன் 'கருணாநிதியின் உயிருக்கு ஏதாவது நடந்தால் அதற்குக் காரணமாயிருந்தவர்கள் அவர்களது முழுக்குடும்பத்துடனேயே அழிக்கப்படும் நிலைவரலாம்! என்ற அர்த்தம்பட பேசினார். அங்கிருந்த தலைவர் அண்ணாவைப்போன்று செயற்பட்டாரில்லை. அண்ணா அங்கிருந்திருந்தால் நிலைமைவேறாக இருந்திருக்கும்.

அதுதான் போகட்டும்.

இனி, தட்டிக்கேட்க ஆளில்லாத மற்றத் தம்பியொருவரின் இலட்சணத்தையும் பார்ப்போம்.

இது அண்மைக் காலத்தில் நடந்தது. அனேகமாக எல்லோரும் நன்றாகத் தெரிந்து வைத்திருப்பது.

"புரட்சித்தலைவன் ஆணையிட்டால் போதும் கருணாநிதியின் தலையை எமது தோழர்கள் கொண்டுவந்து விடுவார்கள்" என்று கூட்டமொன்றில் வீரப் பிரதாபம் செய்திருக்கின்றார் ஒரு தம்பியின் தம்பியொருவர்.

இதைப்பற்றி வருத்தமும் இன்னும் தெரிவிக்கப்படவுமில்லை வார்த்தைகளை மீளப் பெறச் செய்து தாம் அண்ணாவின் பண்புகளையும் பிரதிபலிக்கவேண்டுமே யென்ற சீரிய கொள்கையின் உந்தல் இன்னமும் இப்புரட்சித் தலைவருக்கு எழவும் இல்லை.

யானைபார்த்த குருடர்களின் நிலையில் இவர்கள் அண்ணாவைத் தடவிப்பார்த்துவிட்டிருக்கின்றார்கள் போலும்! அண்ணா வெட்டிவா என்றால் (நெற்கதிர்களை) கட்டி வந்த அந்தத் தம்பியர் எங்கே? வெட்டிவாவென்றால் சாதாரண மனிதனுடைய மட்டுமல்ல ஒரு முதலமைச்சருடைய தலையை அப்படியே வெட்டிவர ஆணையைக்காத்திருக்கும் இந்தத் தம்பியர் எங்கே?

ஐயோ! யார்செய்த குற்றமோ!

நெய் திரண்டு வருகையில் தாழி உடைந்ததைத்தான் நாம் எண்ணி வருந்த வேண்டியுள்ளது.

## குமாரின் கவலை

என் அம்மா சொல்லிச்சு
பெரியவங்களுக்கு மரியாதை
கொடுக்கச்
சொல்லி... எனக்கு
மரியாதை என்ருல்
என்னென்று தெரியும் ஆனு
பெரியவங்கள் தான்
யாரென்று தெரியலியே!
உங்களுக்கு யாருக்கும்
தெரிஞ்சால்
சொல்லிறீங்களா......?

* * *

## பாட்டியின் குரல்

சீலை உரிஞ்சு போகுது
தூக்கி உடுத்து...
பாட்டியின் குரல் கேட்டு
பார்த்தேன் திரும்பி
பைய நடை பயின்ருள்
பொக்குள் தெரிய உடுத்த
தைய லவள்.

—மன்னூர் மணி.—

## ''வளர்க''

மூடக் கொள்கைகளில்
மூழ்கிக் கிடக்கின்ற
தமிழினத்தை மீள
தட்டி எழுப்பி
சீர்திருத்தக் கருத்துகளை
சிந்தைகளில் வளர்க்கும்
பணியினைப் புரிகின்ற
பகுத்தறிவு வளர்க!

—''கசமு''—

---

தரகர்— தம்பி உன்ரை சாத கத்தைத் தாவன் பொருத்த மொண்டு பாப்பம்.

தம்பி— நான் இரண்டு வய திலை செத்துப்போவனெண்டு சாத்திரியார் சாதகமெழுத மறுத்திட்டார். எனக்கு இரண்டு வயது முடிஞ்ச போது சாத்திரியார் முடிஞ்சு போனுர்.

---

மாற்ருன் வீட்டு மல்லிகையும் மணங்கமழும்' என்ற அண்ணுவின் பொன்மொழியையும்,

'என்னிதயம் பரந்தது,
எங்கும் செல்லாதீர்கள்,
இங்கேயே அனைவரும்
குடியிருக்கலாம்'

என்ற அவரது அன்பு கனிந்த அழைப்பும், அவர் அண்ணுவாகவு மில்லை அம்மாவாகமாறி வருந்தி அழைப்பது போன்ற பரிசுத்த மான தாய்மையையே தெளிவா கக் காட்டுகின்றது.

அப்பாடா! மனிதனுகவே பிறந்து மனிதனுகவே வாழ்ந்து போன அண்ணுவின் குணங்களை இனி எங்கு காண்போம்?

தாசிகுலத்தில் பிறந்தவன் நாட்டை ஆள்வதா? என்று வயிற் றெரிச்சல்பட்டு ஒருவர் பேசு வதும், மலையாளத்தான் ஆளவிடு வதா? என்று இன்னுமொருவரும் பேசும் திருத்தமுடியாத சாக் கடையாக மாறிவிட்ட இந்த அரசியலில்......

'திராவிடன்' என்றே ஒலித் துக்கொண்டிருந்த அப்புனித குரல் இனிக்கேட்காதா?

# யாதும்

## பகுத்தறிவு விற்ற பணம்

பகுத்தறிவு ஆசிரியர் குழுவைச் சேர்ந்த ஒருவர் வீதியோரமாக நடந்து கொண்டிருந்தார். தான் கொடுத்திருந்த சஞ்சிகைகள் விற்பனையாகியிருக்கின்றனவா என்று பார்த்துவிடும் ஆசையினுல் அருகேயிருந்த ஒரு புத்தகக் கடையினுள் நுழைந்து பார்வையைச் செலுத்தினுர். இதைக் கண்டுவிட்ட கடைக்காரர். "உங்கடை புத்தகங்கள் முடிஞ்சுதுங்க; இன்னும் கொஞ்சம் போடலாமே" என்ருர். மகிழ்ச்சியோடு நண்பரும் "விற்றுமுடிந்தவைகளுக்கு கணக்கைத் தீர்த்துவிடுங்களேன்" என்றது தான் தாமதம் கடைக்காரர். காசியரைப் பார்த்தார். காசியரும் கடைக்காரரை நன்ருகப் பார்த்தார். இப்படிச் சற்று நேரம். ஒருவரை ஒருவர் ஏனே பார்த்துவிட்டு கடைக்காரர் சொன்னுர் "எதுக்கும் பாருங்கோ நாளைக்கு வந்தால் நல்லது."

இதற்குள் ஒரு இரகசியம் உண்டு. பணங்கொடுக்கப் பின் நின்ற காரணம் தெரியுமோ?

அதுதான் அன்று வெள்ளிக்கிழமை.

* * *

## தலையெழுத்து போத்தலில் விற்கிறதாம்!

தமிழ்நாட்டில் ஒருவருக்கு குழந்தை பிறந்ததிலிருந்து ஒரே கரைச்சலாம். சோதிடம் பார்த்ததில் பிள்ளை கெட்ட ராசியில் பிறந்தது தெரியவந்ததாம். ஒரு போத்தலில் விசம் வாங்கி குழந்தைக்குப் பருக்கிவிட்டு "குழந்தையின் தலையெழுத்து அவ்வளவுதான்" என்று மனம் வருந்தினுராம் தந்தை. எப்படி?

* * *

## தர்ப்பணத்திற்கு 'றிசீற்' கிடைக்குமா?

பெற்ருேர் மரணமடைந்த பின் சாஸ்திரப் பிரகாரம் தர்ப்

# ஊரே....

பணம், சிரார்த்தம் பண்ணுவது சீர்திருத்தக்காரர்களுக்கு பரிகாசமாக இருக்கின்றது.

படைத்த பண்டங்களெல்லாம் இங்கேயே இருக்கின்றனவே! இவைகள் மறுபிறவி எடுத்துவிட்ட பிதுரர்களைச் சேர்வது எப்படி என்று கேட்கிருர்கள்.

ஒருவர் தன்மகனுக்குத் தந்திமணியோடரில் அனுப்பிவிடுமாறு கேட்டு தபால் அதிபரிடம் கையளித்த பணம் இன்னமும் அவரிடமேயிருக்கக் கூடியதாக மகனுக்குப் பணம் போய் சேருவதில்லையா?

இப்படி ஒரு சுவாமிகள் கேட்டுப்பெருமைப் பட்டிருக்கின்ருர், நல்ல கண்டுபிடிப்பு.

எமக்கு எழும் சந்தேகம் இதுதான்.

தந்திமணியோடர் அனுப்பும் போது தபாலதிபர் 'ரசீது' தருகிருர். பணங்கிடைத்ததென்று மகனும் கடிதம் போடுகிறுன். படைத்தபண்டங்கள்கிடைத்தன என்று பிதுரர்கள் 'போஸ்ற்காட்' ஆவது போடுகிருர்களில்லேயே!

* * *

## அம்மாவின் ஆவி அழைத்ததாம்

ஈன்று புறந்தந்த அன்னே கனவில் தோன்றி மகளே 'வா' என்று அழைத்தாளாம். மகளும் கடிதம் எழுதி வைத்துவிட்டு தற்கொலே செய்து விட்டாள்ாம்.

பதினேந்து வருடங்களுக்கு முன்பே இறந்து விட்ட தாயைக் கனவில் கண்டதும் தன் மனத்தைத் தளரவிட்டுவிட்ட மகளுக்கு எமது அனுதாபம்.

கனவு என்றுல் என்ன? எப்படி ஏன் ஏற்படுகின்றது என்பதை ஆராய்ந்து அறியாதிருந்துகொண்டு இன்னும் எத்தனே பேர்களே இந்த அறியாமை பிடித்த

# யாவரும்

சமூகம் பலிகொள்ளப்போகின்றதோ?

* * *

## ஆட்டுக்கல்லு வழிபாட்டிற்கு உரியதாம்

சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒருவர் பெங்களூரிலிருந்து வட இந்தியாவிலுள்ள தன் இடத்திற்கு ஆட்டுக்கல்லொன்றை ரயில் முலம் எடுத்துச் சென்றுர். புகைவண்டி நிலேயத்திலிருந்து அதை வீட்டிற்கு கொண்டு போய்ச்சேர்ப்பதற்காக அடுத்த நாள் ஸ்டேசனுக்குச்சென்றுர். ஆட்டுக்கல்லேத் தூக்குவதற்கு ஆயத்தமாக சென்ற அவருக்கு ஆச்சரியம்காத்திருந்தது. நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டுக்கல்லே நாலு ஐந்து பெண்கள் ஸ்டேசனில் வைத்தே வணங்கிக்கொண்டு நின்றுர்களாம்.

ஆட்டுக் கல்லுக்கு சிவலிங்க யோகம்!

* * *

## 'தியானம்'—சோம்பேறித்தனம்

ஒருமுறை திரு. ஏபிரகாம். ரீ. கோவூர் அவர்கள் மகாநாடொன்றில் பங்கு பற்றுவதற்காக இங்கிலாந்து சென்றிருந்தார். மகாநாடு ஆரம்பமாகியதும் தலேவர் தனது தலேமையுரையில் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளுக்கு மேலேநாடுகள் இலவசமாக எதையும் வினே யோகிக்கக் கூடாது. உதவிகளேயும் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று கூறி டாக்டர் கோவூரைப் பேச அழைத்தார்.

பேச எழுந்த கோவூர் அவர்கள் மேற்படி தலேவரின் பேச்சுக்கு காரணம் என்ன? விளக்கம் வேண்டும் என்று பிடித்துக்கொண்டார். அதற்குத் தலேவராக இருந்தவர் கூறிய வார்த்தைகள் சிந்தனேக்குரியவை.

# பாரீர்!

'உங்களுடைய நாடுகளில் மக்கள் 'தியானம்' செய்தபடி காலத்

# சமத்துவமின்றி சமூகம் நாற்றமெடுக்க...

சமத்துவமின்றி சமூகம் நாற்றமெடுக்க
தமையனற்ற சோதரிகள் (சீ)தனமின்றிவாட
"பேமென்ரி"ல் பெருங்கூட்டம் வாடிவதங்க
மேதினியில் மேன்மையில்லை என்றறிவீர் இளைஞரே!

ஆண்டபரம்பரை நாமென்று ஆர்ப்பரித்து
வேண்டாத நெறிக்காக வேதாந்தம் பேசிநின்று
ஆண்டவன் கதவை அறைந்து பூட்டி
தீண்டாமை பேணல் தீதென்றறிவீர் இளைஞரே!

வயிற்றுக்குச் சோறின்றி மக்கள் வாடுகையில்
பயமற்று வரும் "பறையனை" உள்ளே விடேனென்று
தயங்காது கோயிலைப் பூட்டிவைத்து — தரணிக்குப்
பயனற்ற வழக்குரைத்தல் பாவமென்றறிவீர் இளைஞரே!

பட்டினியால் பெற்ற மக்கள் பரிதவித்துவாட
தொட்டுத் தாலிகட்டிய தோழி தவித்துநிற்க
கொட்டிலை நாடிக் குதூகலமாய்க் குவளையேந்தி
குடிகெடுக்கும் மதுவருந்தல் கொடுமை என்றறிவீர் இளைஞரே!

—ஊரநகர், இரா. கந்தசாமி

---

தைக் கழிக்கிறார்கள். ஓய்வு ஒழிவின்றி உழைக்கும் நாங்கள் உங்களுக்கு உதவுவதன் மூலம் சோம்பேறித்தனத்தை வளர்க்க வேண்டுமா"?

மறுபேச்சில்லை. பேச இருந்ததை ஒரு மூச்சில் பேசிவிட்டு அமர்ந்துவிட்டார் கோவூர் அவர்கள்.

* * *

## இறந்தவர் எழுந்தார் நின்றவர் இறந்தார்

இந்தியாவில் இப்படி நடந்திருக்கிறதென்று 'ஆகாஸ்வாணி' இதழ் கூறுகிறது. இரண்டு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் ஒருவரை ஒருவர் சவால் விட்டுக்கொண்டனர். அதாவது பிரேத அறையினுள் கிடத்தியிருக்கும் சடலங்களில் ஒன்றை ஒவ்வொருவராகச்சென்று தொட்டுப் பார்த்து விட்டுத் திரும்பிவர வேண்டும். முதலில் ஒரு மாணவர் பிரேத அறையினுள் சென்றார். வளத்தியிருந்த சடலத்தைத் தொட்டார். உடனே அப்பிரேதம் எக்காளமிட்டுச் சிரித்துக் கொண்டு எழுந்திருந்தது.

உடனே மயங்கிவிழுந்த அம் மாணவர் இறந்துபோனார். பிரேதம் போல் படுத்துக் கிடந்தவர் அவரைச் சவாலுக்கழைத்த அவருடைய நண்பரேயாவர்.

* * *

('யாதும் ஊரே யாவரும் பாரீர்' என்ற இப்பகுதிக்கு நீங்களும் எழுதலாம். உங்களது ஊரில் உண்மையில் நடப்பவைகளை ஆதாரமும் சேர்த்து எமக்கு அனுப்பிவையுங்கள். அதை யாவரும் பார்க்கச்செய்வோம்! பகுத்தறிவைப் பரவச்செய்வோம்)

# பெரியார் - ஈ. வே. ரா.

அண்ணா இராசேந்திரம்

"தன்மானத் தந்தை, பகுத்தறிவுப் பகலவன், அஞ்சா நெஞ்சன், ஆரியத்துக்கு அச்சத்தைக் கொடுத்துக்கொண்டிருந்த தானைத் தலைவன், செயற்கரிய செய்த பெரியார்" என்றெல்லாம் அன்பர்களாலும், ஆதரவாளர்களாலும் போற்றப்பட்ட—போற்றப்பட்டுவருகின்ற பெரியார்—ஈரோடு வேங்கடப்பர் இராமசாமி அவர்களின் 95வது பிறந்த நாளைக்கொண்டாடுவதற்கு பகுத்தறிவாளர்கள் ஏற்றஒழுங்குகளைச்செய்துகொண்டிருக்கின்றார்கள்.

இரண்டு நூற்றாண்டுகளிலும் அதாவது 19ம், 20ம் நூற்றாண்டுகளில் தமக்கெனத் தனியோர் இடத்தினைப் பெற்றிருந்த பெரியார் பிறந்தநாள், திருவிடத்தைச் சேர்ந்தோர் ஆரியத்துக்கு அடிமையாக இருந்த நாள் ஆரிய ஆதிக்கத்தை, மூடக் கருத்துக்களை தமிழ் மண்ணிலிருந்து அழித்தொழிப்பதற்கு எவரும் துணியாத நாள். நமக்கேன் இந்த வீண்வம்பு—சோலி என்று கூறிய தொடை நடுங்கிகள் பலராக இருந்தநாள். ஆம், அந்நாள்தான் பெரியார் பிறந்த 1879—செப்டம்பர் 17ந் நாள்!

பெரியாரின் பிறந்தநாளை, வெறும் மாலை மரியாதைகளுடன் கொண்டாடினால் போதாது--அவரின் சிலைக்கு பொன்னாடை போர்த்தினால் மட்டும் போதாது. சிலையின் கீழே பொறிக்கப்பட்ட பொன்மொழிகளைப் போற்றுதல் வேண்டும். அவரது கருத்துக்களைப்போற்றுதல் வேண்டும். அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து ஆற்றிடல்வேண்டும்.

"சொன்னதையே செய்தவர். செய்ததையே சொன்னவர்' ஒருவர் உண்டெனில் அவர்பெரியார் என்று நாம் கூறித்தானா தமிழகம் அறிதல் வேண்டும்? எதற்காக நீ இருக்கின்றாய்? என்று என்னைக்கேட்டால், நான் சாவதற்காகவே இருக்கின்றேன் என்பேன்' என்று கூறிய பெரியார் கொள்கைக்காகப் போராடினவர். உயிர் போவதற்கு அஞ்சாதவர். இளம் வயதிலே பகுத்தறிவாளராக இருந்தோர், பலர் வயது ஏற ஏற, பொறுப்புக்கள் அதிகரிக்க, குடும்பச் சுமை கூடிச் செல்ல தமது கொள்கைகளிலிருந்து விலகிச்செல்வோர் பலராக இருக்கின்ற காலத்திலேதான் தமது இறுதி மூச்சுவரைகொள்கையினின்றும் வழுவாது பெரியார் வாழ்ந்துகாட்டினார்.

'மற்றவர்கள் பிள்ளையார் சிலைகளுக்குத் தேங்காய் உடைத்துக் கொண்டிருந்தபோது, அப்பிள்ளையார் சிலைகளையே உடைத்துக்கொண்டிருந்தார் பெரியார். அத்தகைய துணிந்த செயலினாற்றான்இன்னும் தமிழகஅரசு, நடைபாதைகளிலுள்ள சிலைகளையும், கோயில்களையும் இடித்து பாதை

களை ஒழுங்காகப்பேணிவருகின்றது. கோயிலினுள்ளே உள்ள கல்லுக்கும், தெருவோரங்களிலுள்ள கல்லுக்கும்வேறுபாடில்லை, இரண்டும் ஒன்றே. ஆகையால் கல்லை வழிபடுதல் மூடக் கருத்து என்று அண்மைக் காலத்தில் ஆணித்தரமாக வலியுறுத்திவந்தவர்களுள் முதன்மையானவர் பெரியார் ஒருவர்தான்.

புறநானூற்றுக் காலத்திலே கூட கடவுளைப்போற்றுதல் தவறு. கல்லைக் கடவுள் என்று வழிபடுதல் தவறு என்ற கொள்கை வலிமைபெற்றிருந்தது. புறநானூறு 335ம் செய்யுளைப் படித்துப்பாருங்கள்!

மக்களிடையே பரப்ப முன்னின்று உழைத்தார்.

பெரியார் மக்களைப் பார்த்து, 'அறிவாலயங்களை நோக்கிச் செல்லுங்கள், அங்கு பலவற்றைப் பற்றி அறிந்து கொள்ளலாம். அருளாலயங்களை நோக்கிச்செல்லாதீர்கள். அங்கே மூடக் கருத்துக்களையே காணலாம். போட்டி பொறாமை வளரும் இடம் அது' என்று கொள்கை முழக்கம் செய்தார். இதற்கு ஈழத்தில் சிறந்த எடுத்துக்காட்டொன்றைக் காட்டுவேன். 'யாழ்ப்பாணமக்கள் நூலகம் தோன்ற முன்னர், கோட்டையில் முனியப்பரைத் தரிசிப்போர் பலராக இருந்தனர். இன்று

''ஒன்னுத்தெவ்வர் அருஞ்ச மமுருக்கி ஒளிறேந்து
மரபிற் களிறெறிந்து வீழ்ந்ததெனக்

கல்லே பரவினல்லது நெல்லு குத்துப் பரவும்
கடவுளுமிலவே''

அதாவது பகைவர்களையும் யானையையும் கொல்கின்ற வீரனுக்கு நினைவுக் கல் நாட்டிப்போற்றுதல் செய்வதேயன்றி நெற்பொறிதூவி வழிபடும் கடவுள் இல்லை என்பதே இதன் பொருள்.

''ஓசையுள்ள கல்லை நீர் உடைத்து இரண்டாய்ச் செய்துமே
வாசலில் பதித்த கல்லை மழுங்கவே மிதிக்கிறீர்
பூசனைக்கு வைத்த கல்லில் பூவும் நீரும் சாத்துறீர்
ஈசனுக்கு வந்த கல்லு எந்தக் கல்லுச் சொல்லுமே''

என்று அதாவது ஒரு கல்லை இரண்டு பாதியாக உடைத்து ஒன்றில் பூவைத்து வழிபடுதலும், மற்றொன்றில் காலால் மிதிப்பதையும் பற்றிச் சித்தர் சிவவாக்கியர் மேற்காட்டியவாறு பாடியுள்ளார். இதனையே சுப்பிரமணியபாரதியார்.

''ஆங்கொரு கல்லை வாயிற்படி யென்றமைத்
தனன் சிற்பி; மற்றொன்றை ஓங்கிய
பெருமைக் கடவுளின் வடிவெ றுயர்த்தினன்''

என்று பாடிக்காட்டினார். இக் கருத்துகளைத்தான் பெரியார், பகுத்தறிவுக் கண்ணோடு தமிழ்

அங்கு நூலகம் எழுந்ததால், முனியப்பரைக் காண்போரிலும் பார்க்க, நூலப்பரைத் தரிசிக்

கச் செல்வோர் பலராக இருப்பதைக் காண முடிகிறது'

பிள்ளைச்செல்வம் இல்லாதோர், 'காசிக்குப் போனுல் கரு உண்டாகும்' என்று கருதி காசி யாத்திரை செய்த வண்ணம் இருந்தனர். இது அறியாமை என்று கண்ட பெரியார் மருத்துவரைக் கொண்டு ஊசிபோடுங்கள் பெரும்பாலும் பிள்ளை உண்டாகும் என்று அறிவுறுத்தினுர். இதனைத்தான் தமிழ்ச் சினிமாப் படமொன்றிலே, வேடிக்கை வேந்தன், நகைச்சுவை மன்னர், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள், "காசிக்குப் போனுல் கரு உண்டாகும் என்ற காலம் போனுச்சே. ஊசி போட்டால் கரு உண்டாகும் என்ற காலம் வந்தாச்சே'' என்று அழகாக எடுத்துச்சொன்னுர்கள்—

இந்திய நீதித்துறையிலும்—ஆங்கிலேயர் இந்தியாவைஆண்ட காலத்திலும் கூடமூடக் கருத்துக்கள் ஆக்கிரமித்திருந்தன. நீதியின் முடிவுகள், புத்தியின் முடிவுகளாக இல்லாமல் பக்தியின் முடிவுகளாக—வேதம், இதிகாசம், புராணம் முதலியனவற்றின் முடிவுகளாக— இருந்ததைப்பெரியார் கண்டித்தார். நீதியானது, 'சூத்திரர்' என்றே தமிழரைக் கணித்து 'தீர்ப்புகளை வழங்கியது. தமிழ் ஆணும் பெண்ணும் காதல் மணம் செய்ததால், சீர்திருத்த மணம் செய்ததால் அது செல்லுபடியாகவில்லை. முன்னேர்சொன்னவாறு சம்பிருதாயப்படி புரோகித மந்திரப்படி — நடைபெறும் திருமணத்தையே நீதிமன்றம் ஏற்றது. சென்னை உயர்நீதி மன்றத்தில் 'சிதம்பரம்—ரெங்கம்மாள்' என் போரின் வழக்கில், அவர்களது திருமணம் மத சம்பந்தமான நிகழ்ச்சிகளின்றிச் சீர்

## "அறிஞர் அண்ணு"

அறிவென்ற மூன்றே ழுத்தால்
அறிஞராய் உலகில் வாழ்ந்தே
அன்பென்ற மூன்றெ ழுத்தால்
அனைவர்க்கும் அண்ணு வாகித்
திறமையெனும் மூன்றெழுத்தால்
தீரனுய் உலகில் வாழ்ந்தே
தமிழென்ற மூன்றெ முத்தைத்
தரணியில் கார்த்தார் அண்ணு

பண்பென்ற மூன்றெ ழுத்தைப்
பகுத்தறி வாக்கி வைத்தே
புகழென்ற மூன்றெ ழுத்தைப்
புவியினில் நிலைக்கச் செய்தே
உயிரென்ற மூன்றெ ழுத்தை
உலகினில் நீத்தே சென்றுர்
தமிழகம் தன்னை ஆண்ட
தலைவனும் அறிஞர் அண்ணு.

—கொடிகாமம், - காந்தன்

திருத்த மணமாக நடைபெற்றதால் அதனை விசாரித்த நீதிபதி, அத்திருமணம் சட்டப்படிசெல்லாது என்று தீர்ப்புக் கூறினுராம். பாருங்கள், நீதித்துறையிலும் ஆரியம் ஆதிக்கம் பெற்றுத் தமிழரை அடிமைப்படுத்தி வைத்திருப்பதை!

காவேரி ஆறுக்கு இல்லாத சிறப்பு கங்கை நதிக்கு உண்டு. யான் ஆறுக்கு இல்லாத சிறப்பு யமுனை நதிக்கு உண்டு. காப்பேதியன் மலைக்கு இல்லாத சிறப்பு கயிலாய மலைக்கு உண்டு என்று வைதீகர்கள் கூறுவார்கள். ஏன் அப்படிக் கூறுகின்றுர்கள் என்றுல் ஆரியத்தை—இந்து மதத்தை உயர்ந்த இடத்தில் வைப்பதற்காகவே ஆகும். வெள்ளைக்காரனிடம் இதைப்பற்றிக் கூறினுல்

எள்ளிநகையாடுவான். கெக்கட்டம் விட்டுச்சிரிப்பான். எத்தனையோ கோடி மக்களுக்கு உணவளிக்கும் நைல் நதிக்கு இல்லாத சிறப்பா கங்கை நதிக்கு உண்டு? கப்பல் கட்டும் கலைக்குப்பேர் போன கிளைட் நதிக்கு இல்லாத சிறப்பா கங்கை நதிக்கு உண்டு? என்று தான் மேலைநாட்டினர் கேட்பார்கள். உலகத்திலேயே மிகவும் உயர்ந்த நீர்வீழ்ச்சியான 'ஏஞ்சல்' (3300அடி—வெனிசூலா நாட்டிலுள்ளது.) அழகான நீர் வீழ்ச்சியான 'நயகரா' போன்றன வட இந்தியாவில் இருந்திருக்குமானால் பல புரோகிதர்களை அமர்த்தி அவற்றிற்கு முக்காலப் பூசை செய்வித்து, மக்களை ஏமாற்றிப்பணம்பறித்துக்கொண்டிருப்பார்கள். தமிழன் ஏமாந்த வனாகையால் கங்கை நதியையும் கும்பிடுகின்றான். கயிலாயநாதரின் காலடியையும் முத்தமிடுகின்றான் நல்லவேளை பொருளாதாரநெருக்கடி வந்ததோ என்னவோ காசி யாத்திரைக்குப்போகும்தமிழரின் தொகை தற்காலத்தில் குறைந்து விட்டது. இது ஒருவெற்றியே.

நந்த நாயனாரை சொர்க்கத்துக்கு நேரில் அழைத்துச்செல்லக் கூடாது. அவர் தீண்டத்தகாதவர் என்பதால் அவரை நெருப்பிலிட்டுப் புனிதனாக்கி' சொற்கத்துக்கு அழைத்துச் சென்றார்களாம். அவ்வாறுதான் இன்றும் 'சூத்திரர்' என அழைக்கப்படும் தமிழர் வீடுகளில் புரோகிதம் நடைபெறும்போது தமிழரைப் புனிதர்களாக்குவதற்காக தர்ப்பைப் புல்லால் பூணூல் போடப்படுகின்றது. மந்திரம் சொல்லும் வரையாவது அவன் உயர்ந்த நிலையில் இருக்கிறான்! சடங்கு முடிந்ததும் பூணூல் நெருப்பிலிடப்பட்டோ, அல்லது நீரிலிடப்பட்டோ அழிக்கப்படுகிறது. இச்சடங்குகளின் இழி நிலையை பலர் மரபுமுறையில் அவற்றை ஏற்று வருகின்றனர். தம்மை உயர்ந்தோர் எனக் கணிக்கவேண்டும் என்பதற்காகவோ பொன்வேலை செய்வோரும் பூணூல் அணிகிறார்கள் என எண்ணத்தோன்றுகிறது. இத்தகைய சிந்தனைகளைப்பெரியாரிடமிருந்து பலர் அறிந்து கொண்டனர்.

மதக் கருத்துக்களில் நன்கு ஊறியிருந்த சுவாமி விவேகானந்தரிடங்கூட, மதத்தால் எல்லாவற்றையும்பெற்றுக்கொள்ளமுடியாது, மதம் போலியானது போன்ற ஐயங்கள் எழவே செய்தன. 'பகவத் கீதையைப் படிப்பதிலும் பார்க்க கால்பந்தாட்டத்திலீடுபட்டால் மோட்சம் கிடைக்கும்' என்றும் 'பசித்தவனுக்கு உணவு கொடுக்க முடியாத மதம் எப்படி இறந்தவனுக்கு சொர்க்கத்துக்கு வழிகாட்டப் போகின்றது' என்றும் விவேகானந்த அடிகளார் மதத்தில் ஐயங்களை எழுப்பினார். ஆனால் பெரியாரிடம் இத்தகைய சபல நிலை ஏற்படவில்லை. பகுத்தறிவுக் கருத்துக்களில் நிலையான கொள்கையுடையவராக, பற்றுக் கொண்டவராக விளங்கினார்.

---

ஒரு ஆசிரியர்— பள்ளிக் கூடத்தில் பாடங்களை வடிவாக விளங்கப் படுத்தக் கூடாது. அரைகுறையிலை விட்டுவிடவேணும்.

மற்ற ஆசிரியர்— .........??

முதல் ஆசிரியர்— வடிவாக விளங்கப்படுத்தினால் பிள்ளையள் பின்னேரத்திலை ரியூசனுக்கு வராதுகள்.

---

பெரியார், 'திருமணம்' பற்றிக்கொண்டிருந்த கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் நன்ருகப் பரவவில்லை. மக்கள் அவற்றை நன்கு ஆராய்ந்து பார்க்கவுமில்லை. ஆனுல் கோயிலுக்குள் நுழையக் கூடாத மக்கள், பிற்பட்ட நிலையில் உள்ள மக்கள், பழங்குடி மக்கள் என்றெல்லாம் கருதப்படுகின்ற வாய்ப்பிழந்த நிலையிலுள்ள மக்களிடையிலே தான் இன்றும் தமிழ்ப் பண்பாடு, ஆரிய ஆதிக்கமில்லாத விழாக்கள், தமிழ்ப் பெயர்கள் முதலியன சிதைவுருமல் வளர்ந்து வருகின்றன. இவர்களது திருமணம் முதலிய விழாக்கள், புரோகித முறையிலோ, மந்திர தந்திரங்களுடனே நடைபெறுவதில்லை. ஆட்பெயர்கள்— கறுவல், வெள்ளையன், பொன்னி, நன்னியன்— தனித்தமிழ்ப் பெயர்களே!

தமிழர் திருமணவிழா சமஸ்கிருத' மொழியில் மந்திரங்கள் உச்சரிக்கப்பட்டு நடத்தப்படுகின்றன. அந்த மந்திரங்களின் கருத்தினை தமிழ் மணப்பெண்ணும், மணமகனும்,உறவினரும் அறிந்து கொண்டார்களேயாயின் புரோகித முறையிலோ, வடமொழி மந்திரத்துடனே எதுவித விழாக்களையும் நடத்துவதற்குத் தமிழர் விரும்பார்கள். திருமண விழாவில் உச்சரிக்கப்படும் மந்திரங்களில் ஒன்று, 'இந்த மணப்பெண், இதுவரை தேவர்கள் அனைவரினதும், ரிஷிகளினதும், கின்னர்களினதும், கிம்புருடர்களினதும் மனைவியாக இருந்தவள். இறுதியாக பூவுலகிலுள்ள இந்த மண மகனின் மனைவியாக இன்றுமுதல் இருப்பாள்'' இந்த மந்திரத்தைத் தமிழில் கூறினுல் மந்திரத்தைக் கூறுபவரை உருப்படியாக வீட்டுக்குச் செல்ல மணவிழாவை நடத்தியோர் விடுவார்களா? போன்ற கேள்விகளை எழுப்பி, தமிழர் அறியாமை காரணமாக ஏற்றுக்கொண்டிருக்கிற மூடக் கருத்துக்களை அகற்றி ஒழிப்பதற்குப் பெரியார் பாடுபட்டார். மணப்பெண்ணை, அகலிகைபோல், நளாயினிபோல், இந்திராணி போல் வாழ் என வாழ்த்தினுல் மணமகளும், தேவ மாதர்களைப்போல் ஒழுக்கம் கெடுவதற்கு, தவறு விடுவதற்கு தூண்டுதலாக அமையும். ஆகவே மணமகளை அவளது தாயைப்போல், மாமியைப்போல் வாழ்எனவாழ்த்தினுல் ஒவ்வொரு தாயும், மாமியும் தமது வாழ்க்கையின் போது உயர்ந்த பண்புகளுடனேயே வாழ்வார்கள். ஏனெனில் தம்மை மணவிழாக்களில் வாழ்த்தப் போகின்ருர்களே ஆகையால் சிறப்புடன் வாழவேண்டுமென்று. போன்ற கருத்துக்களை, பெரியாரின் சீர்திருத்தத்தின் பின்பே நாமும் உணர்ந்துகொள்ள முடிந்தது.

பெரியாரின் கருத்துக்கள் வளர்க! வாழ்க!!

---

இயற்கையோடு ஒத்துப் போவதான வாழ்வென்பது தேக்கநிலை அல்லது இறப்பு என்று அர்த்தம்படும். இந்த வீட்டினை மனிதன் எப்படிக் கட்டினுன்? இயற்கையோடு ஒத்துப்போய்த்தானு? இல்லவேயில்லை. இயற்கைக்கு எதிரான இடைவிடாத போராட்டம் தான் மனித முன்னேற்றத்தை அமைத்துத் தருமேயன்றி அதனேடு ஒன்றிவாழ்வதல்ல.

—சுவாமி விவேகானந்தர்.—

---

# செந்தமிழர் சீர்கெட்டுப்போனதற்கு சீதணம் ஒரு காரணமா?

இலங்கைத தமிழ்ச் சமுதாயத்தைத் தாங்கிக்கொண்டு நிற்பதற்கும், தரமான பாதையொன்றில் அதை இட்டுச் செல்வதற்கும் தம்மைத் தயார்படுத்திக் கொண்டு நிற்கும் இளம் அன்பர்களுக்கு மேற்கண்ட தலைப்பில் விவாதிப்பதற்கு 'பகுத்தறிவு' களம் அமைத்துத் தந்திருக்கின்றது.

பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டுமாயின் அப்பிரச்சனைகள் தொடர்பான யாவும் ஒழிவுமறைவின்றி வெளிக்கொணரப்பட வேண்டும். ஆதலின் இங்கே ஒழிவுமறைவின்றி நேரடியாகவே கருத்துமோதல்கள் இடம்பெற வேண்டும். அதிமுக்கியமான அவசியம் எழுந்தாலன்றி எதையும் நாம் தணிக்கை செய்யப் போவதுமில்லை.

புளித்துப்போன விடயமாயிற்றே! இதை எத்தனை தடவை விவாதித்தாயிற்று. தமிழர் முன்னேறியதாகக் காணோம்! என்று சலிப்படையாதீர்கள். உங்கள் எண்ணங்களைத் தயங்காது எழுதுங்கள்—பகுத்தறிவுப் பாதையொன்று சமைப்போம்!

---

ஒரு நாள் மாலை நேரம். சிறிய யாழ்ப்பாணம் என்று கருதப்படும் கொழும்பின் ஒருபகுதியிலுள்ள பேருந்து நிலையமொன்றில் நின்று கொண்டிருந்தேன். அருகே நின்ற மரத்தில் நூற்றுக் கணக்கான பறவைகள்—காகங்கள் இருந்தன. கீழே ஒரு கடலை விற்பனை செய்யும் வண்டி. கடலைக்காரன் தேங்காய்ச் சொட்டுக்களோடு சேர்த்துக் கடலையை இழுத்துக் குவித்துக்கொண்டே நின்றான். பார்க்க வாயூறியது,

ஒரு கணநேரம் கழியவில்லை. மரத்தின் மேலிருந்த காகமொன்றின் எச்சம் அப்படியே நேராக வந்து நடுக் கடலைக்கும்பத்தில் விழுந்தது. அதைக் கடலைக்காரன் கண்டும் காணாததுபோல இழுத்துக் குவித்துக்கொண்டிருந்தான். —நீரன்.

---

கோயில் தர்மகர்த்தாவும், பூசகரும் தான் முதலாம் நம்பர் நாஸ்திகர்கள். கடவுள் என்ற ஒன்று இல்லை என்று மனதார நம்புவதால் தான் கோயில் உண்டியலுக்கு இந்தளவு பெரிய பூட்டுப்போடுகிறார்கள்—

—ஈ. வே. ரா.—

சிறு கதை

# "வெள்ளிக்கிழமை"

அமுதன்

''நெஞ்சில் துறவார்
துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்''

கொட்டாஞ்சேனைப் பகுதியில் கோவிலடி நடராசாவை அறியாதவர் ஆருமில்லை. குறிப்பாக சாமிமார்கள் நடராசாவை நன்கு தெரிந்தவராகவும்; அவரின் வீட்டிற்கு விருந்தினராகப் போனவர்களாகவும் தான் இருப்பார்கள்.

நடராசாவுக்கு 'கோவிலடி' எனும் பட்டம் கிடைத்தமைக்கு முக்கியமாக இரு காரணங்களைக் காட்டலாம். ஒன்று அவரது வீடு கோவிற் சூழலில் இருக்கின்றமை; இரண்டு அவர் என்றும் கோவில்களிற் காணப்படுகின்றமை.

வீடு தேடி வரும் அடியார்களையும், சாமிகளையும் 'வருக, வருக' என உள்ளன்போடு வரவேற்கும் வீடு முழு கொட்டாஞ்சேனையிலும் நடராசாவின் வீடு ஒன்றே ஒன்றாகத் தான் இருக்கும். மற்றை வீடுகளிலெல்லாம் விரட்டல் அல்லவா நடைபெறுகின்றன. போதாமைக்கு 'சோம்பேறிப் பயல்கள்' என்றோ, 'சமூக விரோதிகளே'ன்றோ, ஏச்சுப் பேச்சுக்களும் கிடைக்கின்றன. சில வீட்டுக் கேற்றுக்களில் 'கடி நாய்கள் கவனம்' என விளம்பரம் போடப்பட்டு, வாசலிலேயே திருப்பி அனுப்பப்படுதலும் நடைபெறுகின்றது. இவற்றுக்கு எதிர்மாறாக, விருந்தோம்பலுக்கு இலக்கியமாக, வாசலில் கோலம் போடப்பட்டு, கதவு நிலையில் மா இலையும், திரிபுண்டலமாக திருநீறும், சந்தன குங்குமப் பொட்டும் போடப்பட்டு மங்களகரமாக வரவேற்புக் கோலத்தில் இருக்கும் வீடு நடராசாவினது மட்டுமே. அனைத்திற்கும் பொருத்தமாக வீட்டிற்கு 'அன்பகம்' என நாமமும் சூட்டியுள்ளார் நடராசா.

வரும் விருந்தை மனமாகத் தான் நடராசாவின் மனைவி பார்வதியும் ஏற்கின்றாள். இதுவரை ஒரு நாட்கூட வேண்டா வெறுப்பாகவோ, அசட்டையாகவோ, அக்கறையின்மையாகவோ, வருபவர்களை பார்வதி நடத்தியதே இல்லை.

அன்று தான் அடிசிற்கினியவளாக, அன்புடைய மாதாக, படிசொற் தவறாத பாவையாக அடிவருடி பின் தூங்கி முன் எழுந்த பேதையாக ஒரு வாசுகி வாழ்ந்தாளல்ல, இன்னும் வாழ்கின்றாள் என்று சொல்லக்கூடியதாக வள்ளுவனுக்கேற்ற வாசுகி போல், நட

ராசாவிற்கேற்ற நல்லாளாக பார்வதியும் வாழ்ந்து வருகின்ருள்.

கருத்தறிந்தல்ல, கட்டளையிட்டுமே கணவனின் விருப்பு வெறுப்புக்கிசைய மனைவி நடந்திடா இன்றைய நவநாகரிக காலத்தில், புதுமை என்ற பேரில் ஒழுக்கமின்மையும் நடமாடும் இன்றைய நாளில் பார்வதி போல் ஒருத்தியைக் காணல் அரிதே தான்.

''தெய்வந் தொழாஅள்
கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை''

என்பன போன்ற வள்ளுவத்தை தவருது தினமும் பார்வதி வாசிப்பதன் விளைவே இது. சிந்தையில் விதைக்கப்படும் கருத்து விதைகள் செயலாகத் தானே முளைவிடும்!

பார்வதியைப் பார்க்குமிடத்து 'கற்பென்பதும், கற்புக்கரசியென்பதும் தமிழ் இலக்கிய படைப்பாளரின் கற்பனையே' என்பது பொய்க்கின்றது. கற்புக்கரசிகள் என்றென்றும் வாழ்வார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

நடராசா கற்புக்கரசியை மனையாளாக்கிய பாக்கியம் பெற்றிருந்தும், பெரும் சொத்துப்பத்துக்களுக்கு சொந்தக்காரராகி நிறைய பணம் பெற்றிருந்தும், ஒரு மகவுக்காவது தந்தை என்ற செல்வத்தை பெற்ருர் அல்லர். 'பிள்ளைப் பேறு இல்லையே' என்ற கவலை அவரை வாட்டி வதைத்தது. பிள்ளை வரம் கேட்டு அவர் போகாத கோவிலில்லை. ஆடாத தீர்த்தமில்லை. ஈழத்தின் தென் மூலை கதிர்காமம் முதல், இந்தியாவின் வட முகடு காசிவரை குடும்ப சமேதராய் ஒருமுறையல்ல—பலமுறை தரிசனம் செய்துள்ளார். என்ன செய்தும் இன்னமும் பிள்ளைச் செல்வத்தை அவர் பெற்ருர் அல்லர்.

''குழல்இனிது யாழ்இனிது
என்பர்தம் மக்கள்
மழலைச்சொல் கேளாதவர்''

என்பது போன்ற குறளைப் படிக்கும் போதெல்லாம், நடராசாவின் மனம் படாதபாடுபட்டது. அப்படியே பார்வதியும். ''அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்'' என்பதை அனுபவரீதியில் மகிழத் துடிதுடித்தாள். தாய்மையைப் பெற்றிடத்தவித்தாள்.

அவர்களின் தவிப்பின் விளைவே, அவர்கள் செய்து வரும் தான தருமம். 'இல்லை' என் போருக்கும், சமயத்திற்கும் இறைத்துக் கொண்டே வருகின்றனர். இவர்கள் தொடர்ந்தும் இத்தொண்டைச் செய்யக் கூடியதாக, நடராசாவின் நகைக் கடைத் தொழிலுமிருந்தது. செட்டித் தெருவில் பெரிய நகைக்கடை வியாபாரி நடராசா. நடராசாவின் தொழிலாளரும் நாணயமும், நம்பிக்கையும் மிக்கவர். இதனுல் கடைபற்றியோ, வருவாய் பற்றியோ கவலை அற்று சமயப் பற்றும், சமய வாழ்வும் மேற்கொள்கின்ருர்.

இப்போது நடராசா வெள்ளிக்கிழமை தோறும் மௌன விரதமும் பிடிக்கின்ருர். அன்று முழு நாளும் யாருடனும் பேச்சின்றி, தியானத்திலே நாளை ஓட்டுகின்ருர். மத்தியானம் மட்டும் அடியார் ஒருவருக்கு உணவு அளித்து, அடியார் உண்டதன் பின்பே உணவு அருந்துகின்ருர். அதன்

முன்போ, பின்போ எதுவும் உண்ணாது விரதமாக நாளைக் கழிக்கின்றார்.

வெள்ளிக்கிழமை என்றால் நிரம்ப வேலை பார்வதிக்கே, அன்றைய நாள் வேலைகளை மன மகிழ்வுடன் ஆற்றுவாள் பார்வதியும்.

அன்றைய வெள்ளிக்கிழமை வழக்கம்போல் வேலைகளை வேகமாகக் கவனித்துக்கொண்டிருந்தாள் பார்வதி. நாலு பேர் சாப்பாட்டிற்கும் வந்தனர். வந்தவர்களுள் மூவர் பழக்கமானவர். ஒருவர் அறிமுகமாகாதவர். புதியவர் சிவ சின்னங்களுடன்சிறந்த அடியாராகக் காட்சியளித்தார். பார்வதி நால்வரையும் உண்ண வைத்து, சாலையுள் ஆறி அமரவும் இடமளித்தாள். வந்தவர்களுள் இருவர் மத்தியானப் போசனத்துடனேயே போய்விட்டனர். மற்றவர் மாலை நேரம் மட்டும் நின்று தேனீரும் அருந்தி விட்டுச்சென்றார். அடியவர் உணவையோ, வசதிகளையோ தேடினாரில்லை, சிவ பக்தன் போல் முழுநேரத்தையும் பூசையிலும், தியானத்திலும் செலவிட்டார். ஏழு, ஏழரை மணி வரை வழிபாட்டிலேயே கண்ணாக விருந்தவர், களைப்புற்றவராகி, கண்ணயர்ந்தும் விட்டார். அடியவரின் தோற்றத்தையும், கருமங்களையும் கவனித்த பார்வதி அவருடன் பேச்சுக் கொடுக்கவும் துணிந்தாளில்லை. உத்தமன், உயர்ந்தவன், உண்மைப் பக்தன் என்ற நினைப்பில் கூடுதலாக மரியாதையும், உதவியும் செய்துவிட்டு அவரை குழப்ப மனமின்றி அப்படியே நித்திரையாகவும் விட்டாள். பார்வதியின் செய்கை அனைத்திற்கும் தலை அசைத்து ஆமோதித்தார் நடராசா.

நல்ல சிவனடியாரை விருந்தினனாக பெற்றது தாம் பெற்ற தவம் என்ற எண்ணத்தோடு, நடராசா வீட்டார் அனைவரும் தம் தம் கடன்களைமுடித்துக்கொண்டு நேரத்தோடே நித்திரைக்கும் போயினர்.

* * *

கதிரவன் வானக் கடலிலிருந்து மேல் நோக்கி கிளம்பிக் கொண்டிருந்தான். அவனதுசெங் கதிர்கள் வான வண்ணக் கடலை நிமிடத்திற்கு நிமிடம் வண்ணம் மாற்றி—வடிவம் மாற்றி சித்திரக் கலைச்சாலையோ என மயங்கும் அளவிற்கு மாயாஜாலம் செய்து மகிழ்வூட்டிக் கொண்டிருந்தான்.

பரிதிஇத்தனை அழகைத் தந்தும், கண்ணிருந்தும் குருடர்களாக காலமோட்டுகின்றோமே என்ற எண்ணம் மனத்தகத்தே தோன்ற, மதிப்பரிய பேரழகை பெரிதும் இரசிப்பவளாக, நீண்ட சாளர வழியாக இயற்கை அன்னையை கண்டு இன்புற்றவளாக பார்வதி நின்றுகொண்டேயிருந்தாள். அவளது வாய் அவளை அறியாமலே,

'பரிதியே! பொருள் யாவிற்கும் முதலே
பானுவே! பொன்செய்
பேரொளித் திரளே!

கருதி நின்னை வணங்கிட வந்தேன்;
கதிர்கொள் வாண்முகம்
காட்டு சற்றே''

எனும் பாரதி பாடலை முணுக்கியது.

இப்படி அதிக நேரம் தன்னை அறியாமலே போக்கிவிட்டமையால், கணவனுக்கு கோப்பி கொடுக்கும் நேரத்தை தவறவிடு

கின்றேனே என்ற தவிப்புடன், அவசர அவசரமாக கோப்பியைத் தயார் செய்துகொண்டு நடராசாவின் அறைக்குள் நுழைந்தாள்.

அறையுள் கால் வைத்த நிமிடமே பேரதிர்ச்சி பார்வதியை பலமாகத் தாக்கியது. ஐயோ அநியாயம்! என அலறி விட்டாள் அவள் கோப்பை விழுந்து சில்ல பொல்லமானது.

நடராசா வாயுள் துணி அடைக்கப்பட்டு, கட்டிலுடன் கட்டப்பட்டு, கன்னங்களில் அடிக் காயங்களுடன், கண் கலங்கிய நிலையில் நின்று கொண்டிருந்தார்.

விரைந்து கட்டுக்களை அவிழ்த்தாள் வாய்த் துணியை இழுத்தெடுத்தாள். இரத்தம் இன்னும் வடிந்து கொண்டிருந்தது. நீறு பூசிய மேனி கயிற்றுத் தழும்புகளுடன் கழுத்து, சிவத்து இருந்தது.

"என்ன நடந்தது? யார் இப் பாதகத்தைச் செய்தது' என விம்மலுடன் விசாரித்தாள்.

"எல்லாம் சாமி வேடம் தாங்கி வந்த பாதகன் செய்தது. அவன்தான் நேற்று வந்த புதியவன்"

"அவன் இதனை எப்படிச் செய்தான்?"

"அவனது கோஷ்டி சாமத்தில் வீட்டுள் நுழைந்து. என்னையும் பெருமாள் வேலையாளையும் கட்டிப்போட்டு விட்டு காடைக் கூட்டம் வீட்டைச் சூறையாடியது"

ஐயோ அப்ப பெருமாள் எங்கே?

"அதோ அந்தத் தூணுடன்"

இருவரும் பெருமாளின் கட்டுக்களை அவிழ்த்தனர். அதன்மேல் அறைகளுக்கு ஓடி நிலைமையைக் கணக்கெடுத்தனர்.

சுமார் ஐம்பதினாயிரம் இரவோடு இரவாக கொள்ளை அடிக்கப்பட்டு விட்டது.

பார்வதிக்கு பொருள் போனதை விட பேரிழப்பு ஒன்று நடந்ததுபோல் சஞ்சலப்பட்டவளாய், கேட்கவும் மனமோ, துணிவோ இன்றி அவஸ்தைப்பட்டு, ஆறுதலாக அடுத்தவரின் காதில் படாத விதத்தில், "நீங்கள் இரவு எனது படுக்கை அறைப் பக்கம் வந்தீர்களா?" என வினவினாள்.

"வரவில்லையே, ஏன்?!"

"ஐயோ அட பாவி! அவன் எனது கற்பையுமல்லவா சூறையாடிக்கொண்டு போயிட்டான்" என அலறிய வண்ணம் மூர்ச்சையாகி பட்ட மரம் போல் நிலத்தில் வீழ்ந்தாள், விழுந்தவள் விழுந்தவள் தான், திரும்ப எழும்ப அரை மணித்தியாலத்திற்கு மேலாக எடுத்தது.

கோலத்தை உண்மையென நம்பியதால், கொடும் கொடுமை நடந்து முடிந்தது!

(யாவும் கற்பனை)

# நம்பிக்கை

## —ஒரு நோக்கு

"புளுகர் பொன்னையா"வை முப்பத்தியொரு தடவைகள் இலங்கையின் பல பாகங்களிலும் மேடையேற்றித் தமிழ் மக்களை மகிழ்வித்துப் பெரும் புகழீட்டிய கொழும்பு யாழ் கலை அரங்கம் கடந்த ஜுலை மாதம் நம்பிக்கை என்ற ஓர் அரிய நாடகத்தை கொழும்பில் மேடையேற்றியிருந்தது. 27-ந் திகதி சரஸ்வதி மண்டபத்திலும் 28ந் திகதி இராமகிருஷ்ண மண்டபத்திலும் ஒகத்து மாதம் 18ம் திகதி லயனல் வெண்ற் மண்டபத்திலும் இந்நாடகம் மேடையேற்றப்பட்டிருந்தது.

இந்நாடகத்தை பிறவுண்சன் இன்டஸ்றீஸ் உரிமையாளர் திரு. வேலணை வீரசிங்கம் அவர்கள் தயாரித்திருந்தார்கள். மேடைக் கதை, வசனத்தை "வரணியூரான்" எழுதியிருந்ததோடு அவரே நாடகத்தை நெறிப்படுத்தியுமிருந்தார்.

மூலக்கதை, விஞ்ஞானப் பட்டதாரியும் பகுத்தறிவுவாதியும் இலங்கைப் பகுத்தறிவுச் சங்கத்தின் தலைவரும் மனோதத்துவ இயலில் ஆராய்ச்சிகள் செய்து பல சாதனைகளை நிலைநாட்டி வருபவரும் அத்துறையில் அவர் புரிந்துள்ள ஆராய்ச்சிகளுக்காக அமெரிக்க சர்வகலாசாலை ஒன்றினால் டாக்டர் பட்டம் வழங்கப் பட்டுக் கௌரவிக்கப்பட்டுள்ளவருமாகிய ஆபிரகாம்கோவூர் அவர்களுடையதாகும்.

பேய் பிசாசுகள், இறந்தவர்களுடைய ஆவிகள் ஆகியவற்றால் பிடிக்கப்பட்டவர்கள் என்று கூறப்படும் எத்தனையோ பேர்களின் மன நோயை மனோவசிய முறையினால் குணப்படுத்தி, "பேய், பிசாசு என்று ஒன்று மில்லை, மனதில் ஏற்படும் நோய் தான். மக்களின் அறியாமையினால், பேய், பிசாசு என்று சொல்லப்படுகின்றது" என்பதைச் செயலால் நிரூபித்துக் காட்டி வருபவர் டாக்டர் கோவூர் அவர்கள். அப்படி அவர்களால் குணப்படுத்தப்பட்ட ஒரு இளம் பெண்ணின் உண்மைக் கதைதான் நம்பிக்கை நாடகத்தின் மூலக் கதை. இக்கதை இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது இலங்கையின் தென் மாகாணத்தில் உள்ள ஒரு கிராமத்தில் நடைபெற்ற உண்மைச் சம்பவமாகும்

"இறந்தாலும் நான் உன்னை மறவேன். என் ஆவி உன்னைத் தேடிக்கொண்டு வரும்" என்று தன் தளராத அன்பை எடுத்துக் காட்டுவதற்காகப் பட்டாளத்தில் சேர்ந்து எகிப்து தேசத்துக்குச் சென்றபொழுது கூறிச் சென்ற கணவனிடமிருந்து கடிதங்கள் வராமல் நின்று விட்டதாலும் அவன் இறந்து விட்டான் என்று நம்பியதாலும், காப்பாற்றி வந்த தந்தையும் இறந்து போக தாயாரையும் வைத்துக்கொண்டு வாழ்வதற்கு வேறு வழியில்லாததால் ஒரு இளம் பெண் அவள் மீது

ஆசை கொண்டிருந்த அவ்வூர்த் தபால்காரனோடு வாழ்க்கை நடத்தி ஒரு பிள்ளைக்கும் தாயாகி விடுகிறாள்.

ஆனால், அவளுடைய கணவனின் "ஆவி" அடிக்கடி அவளைப் 'பிடித்து' ஆட்டிக்கொண்டு வந்தது. பேயாட்டுபவர்களைக் கொண்டு "கழிப்பு"க் கழித்தும் பலன் ஏதும் ஏற்படவில்லை. அந்தப் பெண் கடைசியில் கோவூர் அவர்களால் மனோவசிய முறையில் குணப்படுத்தப் படுகிறாள்.

பேய், பிசாசு, ஆவிகள் ஆகியவற்றில் நம்பிக்கை வைத்து எந்நேரமும் பேய்களைப் பற்றிப் பேசி வரும் அப்பெண்ணின் தாய் அவளிடம் ஏற்படுத்தியிருந்த மூடநம்பிக்கையும் தான் இறந்தாலும் தன்னுடைய ஆவி அவளைத் தேடிக்கொண்டு வரும் என்ற அவளுடைய கணவனின் கூற்றின் நினைவும் முன்பிருந்தே அவள்மீது "ஒரு கண்" வைத்திருந்த அவ்வூர்த் தபால்காரன் அவளுடைய கணவன் அவளுக்கு அனுப்பிய கடிதங்களைக்கொடுக்காமல் அவள் இறந்து விட்டதாகச் செய்த சூழ்ச்சியும் சேர்ந்து அப்பெண்ணை மனநோய்க் குள்ளாக்கி விட்டது என்பதை சம்பந்தப் பட்டவர்களுடன் தனிமையில் பேசிப் புரிந்துகொண்ட டாக்டர் கோவூர் அவர்கள் அப் பெண்ணைத் தன் மனோவசிய சக்தியால் மயக்க நிலையில் வைத்து அவளுடைய அடிமனதில் பதிந்து போயிருந்த பேய் பிசாசுகள் பற்றிய மூடக் கருத்தையும் அதனால் ஏற்பட்டிருந்த பயத்தையும் தனது பேச்சினால் அகற்றி அப் பெண்ணைக் குணப்படுத்துகிறார். இதன் மூலம் அப்பெண்ணின் கணவனுடைய "ஆவி" அவளைப் 'பிடித்திருக்க'' வில்லை என்பதை அவர் நிலைநாட்டியதை மேலும் உறுதிப் படுத்துவதைப் போன்று இறந்து விட்டதாகச் சொல்லப் பட்ட அப்பெண்ணின் கணவனே சில நாட்களுக்குப் பின்பு யுத்தத்திலிருந்து திரும்பி வருகிறான்!

இது உண்மையில் நடந்த கதை. இதுவே நம்பிக்கை என்ற நாடகம் ஆச்கப் பட்டு நல்ல முறையில் மேடையேற்றப்பட்டிருந்தது.

இந்நாடகத்தில் பங்குபற்றிய ஒவ்வொருவரும் தமது பாத்திரத்தை நன்கு உணர்ந்து நன்றாக நடித்திருந்தனர். டாக்டர் கோவூராக நடித்த ஜோர்ஜ் சந்திரசேகரன் தொடங்கி குழந்தையாக நடித்த குறளரசு வரை எல்லோரும் நன்றாக நடித்திருந்தனர். அவர்கள் ஒவ்வொருவருடைய நடிப்பைப் பற்றியும் தனித் தனியே விமரிசனம் செய்வதற்கு இங்கு இடம் போதாது. இருந்த போதிலும் இரண்டு நடிகர்களைப் பற்றிக் குறிப்பிட்டே ஆகவேண்டுமென்று எண்ணுகின்றேன்.

பேய், பிசாசு, ஆவிகள் ஆகியவற்றில் நம்பிக்கை வைத்து எந்

---

மகன்—அப்பா எங்கடை கோழிக்கு முட்டைக்கோப்பி கொடுக்கவேணும்.

அப்பா............?

மகன்—இந்த வெள்ளை முட்டையிலை சத்தில்லையெண்டு அம்மா சொல்லுறா. சத்தில்லாதவர்கள் முட்டைக் கோப்பி குடிக்கவேணுமென்று நீங்கள் சொல்லுறியள்.........

---

நேரமும் பேய்களைப் பற்றி பேசி வரும் சின்னம்மாவாக வந்த சந்திரப்பிரபா மாதவன் பகுத்தறிவற்ற மூடக் கொள்கைகளை நம்பிக்கொண்டு இந்த நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கும் இலட்சக்கணக்கான பெண்களின் பாத்திரத்தை கண்முன் தத்ரூபமாகக் கொண்டுவந்து நிறுத்துகின்ருர்.

தபால்காரர் தருமலிங்கமாக மாக வரும் கே. எஸ். பாலச்சந்திரன் எமது கிராமப்புறங்களிலுள்ள தபாற்காரர்களின் கடைந்தெடுத்த பிரதிநிதியாகக் காட்சியளிக்கிருர். எல்லோருடனும் சகசமாகப் பேசிப்பழகும் இயல்பு அதற்கேற்றசாதுரியமானபேச்சு, தொனி, நடை, உடை, பாவனை எல்லாம் இயல்பாக அமைந்து இருக்கின்றன.

கணவனின் "ஆவி"யால் பிடிக்கப்பட்ட கமலா கையில் உலக்கையை எடுத்து அதைத் துவக்காகப் பாவித்து அவரைத் துரத்திக்கொண்டு செல்லும் பொழுது அவருடைய பரிதவிப்பு, பதட்டம், பதுங்கல், பாய்ச்சல், விழி பிதுங்கல், கதறல், குமுறல், அத்தோடு கமலாவின் மீதுள்ள பரிவு, கரிசனை எல்லாம் உண்மையாக நடப்பவை போலவிருக்கின்றன. இக்கட்டம் நாடகத்தில் வரும் ஹாஸ்யமான பகுதியுமாகும்.

நாடகத்தின் எல்லா நிகழ்ச்சிகளையும் ஒரு அறையிலேயேநடைபெறச்செய்திருந்தும் நாடகம் பார்ப்பவர்களுக்கு அதுதோன் ருதபடியும் அலுப்புச் சலிப்பு ஏற்படாத வகையிலும் நாடகத்தை விறுவிறுப்பாகவும் சுவாரஸ்யமாகவும் இயக்கியிருப்பது பாராட்டப்படவேண்டியது.

---

ஒரு கைதி— அந்த மனுசனை பேய் அடிச்சதெண்டு எல்லாரும் சொல்லுகினம். உன்னை ஏன் பொலிஸ்காரர் பிடிச்சவங்கள்?

மற்றக் கைதி— போடா போ! எல்லாரும் அப்படித் தான் சொல்லுகினம். ஆனல் அந்த டாக்டர் படிச்சவராச்சே! கண்டுபிடிச்சிட்டார் நான் தான் அடிச்சதெண்டு. என்னுடைய போதாத காலம்!

---

கதையின் அதிமுக்கியமான கட்டங்கள் டாக்டர் கோவூர் அவர்கள் 'ஆவி'யால் 'பிடிக்க'ப் பட்டவள் என்ற பெண்ணை மனோவசியத்தைப் பிரயோகித்துக் குணப்படுத்துவதும் இறந்து போய் ஆவிவடிவில் வந்து மனைவியைப் 'பிடித்து' ஆட்டிக்கொண்டிருந்தவன் என்பவன் உயிர்—உடலுடன் திரும்பி வருவதுமாகும்.

நாடகத்தைப் பார்க்கின்றவர்கள் மத்தியில் இந்நிகழ்ச்சிகள் சரியான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற அளவில் காட்டப்படவில்லை.

நம்பிக்கை நாடகம் படமாக்கப் பட வேண்டிய நாடகம் ஆகும். நல்ல நாடகத்துக்கு வேண்டிய கதை அம்சமும் மக்களுக்கு மிகவும் பயனுள்ள கருத்தும் ஒருங்கே அமையப்பெற்ற நாடகம்.

நம்பிக்கை நாடகம் படமாக வேண்டுமென்ற நம்பிக்கை கைகூடுமென்று நம்புகிறேம்.

—அருள்—

# சுசி— சுசி— சுசி—

குழந்தைகளிடம் உள்ளத்தைப் பறிகொடுக்காத கொலைகாரர்கூட இல்லை.

குழந்தையுள்ளங் கொண்ட வளர்ந்தவர்களும் நெஞ்சங்களைக் கொள்ளைகொண்டு விடுவது ஒன்றும் வியப்பு அல்ல.

சுசியும் அப்படித்தான்.

சில வரிகளில் கதையைக் கூறுவதாயின்:— வயதில் குமரி குணத்தில் குழந்தையான சுசி தன் அந்தஸ்திலும் கூடிய வாலிபன் ஒருவனைக் காதலித்து திருமணமாகு முன்பே அவனும் கப்பலில் ஏறி வெளிநாட்டிற்குப் போகின்றான். திரும்பிவர ஆண்டுகள் சில ஆகிவிடுகின்றது. தாய்மை நிலையில் விடப்பட்டிருந்த சுசி சமூகப் பிரச்சனைகளால் அலைக்கழிக்கப்படாதிருக்கவேண்டி ஏற்கனவே சுசி மீது ஒரு கண் வைத்திருந்த முதலாளியொருவரை மணக்கவேண்டி வருகிறது. சில ஆண்டுகளில் காதலன் இலங்கை வந்து ஓடோடிச் சுசியிடம் செல்கிறான். அவளோ பாலகனைக் கையிலேந்திக்கொண்டு நிற்கிறாள். தனது பிள்ளைக்கு அவன் உரிமைகொண்டாடினாலும் காதல் அவனைச் சுசியுடன் மீண்டும் இணைத்துவிடுகிறது. முதலாளி பெருமனது காட்டுகிறார்.

தேவையற்ற காட்சியென்று எதையுமே ஒதுக்கிவிடுவதற்கில்லை.

தன்னுடைய பிள்ளைக்காக காதலன் வாதாடிய திறமையில் சிறிதையாவது வெளிநாட்டிலிருக்கையில் தனது காதலியோடு கடிதத்தொடர்பு கொள்வதில் செலவுசெய்திருக்கலாம்—இருந்தாலும் பரவாயில்லை.

வெளிமனதோடு கள்ளமின்றிப்பழகி என்னை மறக்க முடியுமா? என்று கேட்கின்றாள் சுசி.

ஒரு சிங்களச் சினிமாவொன்றையும் பார்க்கவேண்டும் போல் தோன்றினால் — நிச்சயம் 'சுசி'யைத் தவறவிடக் கூடாது.

# மாய்மால மாமன்னன் சாய்பாபா பேய்க்காட்டு வித்தையில் விண்ணனும்!

ரூ. 94,00000?

பரத்தைச் சாமியார் பணத்தோடே
கிருஸ்ண சாமியார் கோமணத்தோடா?

கலியுகவரதனே! பணத்தை நீ
பலிகொண்டு வருவதேன்?

கண்கண்டதெய்வமே நீ
காலேவாரலாமோ?

அவதார புருசனுக்குத் திருவிளேயாட்டு!
அப்பாவிச் சகோதரர்களுக்குப் பெரும்பாடு!!

பகவானே! உன்னிடம் பணத்தாசை
புகலாமோ?

மணிமொழி கேட்டு அலுத்துப் போச்சு—உன்
MONEY மொழி கோட்டுக்கு இழுத்து வரலாச்சே!

கேடுகெட்ட அலங்கோலமே!
கோட்டுக்கு வரச் சங்கேனமோ?

பக்தர்கள் பரபரப்படைகின்றனர்,
பசனேக் கோஸ்டிகளில்
குசுகுசு பேச்சுக்கள் ஆரம்பம்.

சேதிதெரியுமோ?

கடவுளின் அவதாரம், கலியுக வரதன், கண்கண்ட தெய்வம், அவதாரபுருசன், கிருஸ்ணரின் வாரீசு, பகவான் சத்தியசாய் பாபா ராமகிருஸ்ணு, முத்துக் கிருஸ்ணு என்னும் சகோதரர்கள் வியர்வை சிந்தி உழைத்துச் சேர்த்த பணத்தைக் கபளீகரம் செய்துவிட்டாராம்!

உடம்புளத்திச் சீவிக்க வென்று அப்பாவிகளின் உழைப்பை உறிஞ்சி எடுத்து ஏப்பம் விட்டு விட்டார்.

சுளேசுளேயாகச் சுவைத்துத் தீர்த்துவிட்டாரோ! சொல்லாமல்

கொள்ளாமல் சொத்துக்கள் சேர்த்துக் குவித்து விட்டாரோ?

ஆண்டவன் பெற்றுக் கொண்ட பணமென்ன மீண்டு வருமோ? பாம்பின் வாய்ப்பட்ட தவளையாச்சே!

அரோகரா!

பெரிய உத்தியோகம் கிடைக்க வேண்டுமென்றும்,
பெரிய செல்வம் கிடைக்க வேண்டுமென்றும்,
பெரிய இடத்துப் பெண் கிடைக்க வேண்டுமென்றும்,
படித்துப் பட்டம் பெற்ற மாப்பிள்ளை வேண்டுமென்றும்,

விரதம் பிடித்து பக்தர்கள் ஆண்டவனை வேண்டுகிறார்களே!

அதுதான் போகட்டும் சோம் பேறிக் கூட்டம்.

அப்படித்தான் பணத்தைத் தரும்படி நவீன ஆண்டவன்—மயக்குமொழி வித்தகன்—மாய்மால மன்னன்—அகில உலக ஸ்ரீ அசுர சந்திர சூரியர்களின் வாலிபத் தலைவனை (கண்ணகியின் கூந்தல் கலைந்த கதை 'தமிழ் உலகம்' படித்தவர்களுக்குத் தெரியும்)யும் இச்சகோதரர்கள் வேண்டிப் பார்த்தனர் போலும்

அண்டவெளிக் காற்றைப் பிடித்து வீபூதியாக்கித்தரும் அவதாரம்—

வீசிய காற்றை வளைத்துச் சுருட்டி 'சீக்கோ' கடிகாரம் எடுத்த விண்ணன்—

கணவன் புட்டர்பத்தியிலிருக்கும் போதே இலங்கையிலிருக்கும் அவன் மனைவியுடன் இரவை இன்பமாகக் கழித்த மன்மதக் குஞ்சு—

கேவலம் அச்சடித்த கடதாசிக் கட்டுகளில் நாலு, ஐந்தை எடுத்துக் கொடுக்கவில்லையாம்!

வங்கிகளில் கடன் பெறுவதற்கு முன் கரண்டி (Guarantee) கேட்டுக் கொள்வதுபோல் இச் சகோதரர்கள் சாய்பாபாவிடம் கேட்டுக்கொள்ளவில்லைபோலும்!

இல்லை, அண்டவெளியில் காற்று ஏராளமாக கிடைக்கும் போது அவருக்கு முடியாதது ஒன்றுமில்லை என்று எண்ணியிருக்கலாம்.

காற்றைப்பிடித்துச் சுருட்டித் திரட்டி மகாமகோன்னத சக்தியால் கடதாசி செய்ய முடியாத நிலையில் பகவான் இருக்கலாம். அப்படியாயின் பழகிப் போன வழிகள்தான் எத்தனையோ உண்டல்லவா?

ஒன்று— ஜப்பானிலுள்ள சீக்கோ நிறுவனத்திலிருந்து கொடுக்கவேண்டிய பணத்தின் பெறுமதிக்குத் தேவையான கடிகாரங்களை காற்றின் மூலம் வரவழைத்து கடனைத் தீர்க்கலாம். (முக்கிய குறிப்பு — இப்படித் தொடர்ந்து செய்தால் அவர்கள் கொம்பனியை மூடிவிடுவார்கள்.)

இரண்டு — தாலிக்கொடி, மோதிரம் போன்ற நகைகளை அண்டவெளியினின்றும் கையைத் துளாவி எடுத்துப் பிரச்சினையை தீர்த்துவிடலாம்!

என்னவோ! சாய்பாபாவில் ஏற்பட்ட அனுதாபத்தால் இப் புத்திகளை இங்கு கூறுகின்றோம்.

அட அசிங்கமே! மன்னிக்கவும் ஆண்டவனுக்குப் புத்திகூறும் தகைமை அற்பமனிதராகியஎமக்கேது?

என்ருலும் ஒரு சந்தேகம். இல்லை... இல்லை... அதை விட்டு விடுவோம்—ஏன்தான் ஆண்டவனுக்கெதிராகக் கேள்விகளைக் கேட்டு... பிறகு...... ஏதேன்...... இரவிலை...... கிரவிலை......

ஆற்ருத சகோதரர்கள் பெங்களூர் டிஸ்ற்றிக் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றனர். நீதிமன்றம் முதலாம் முறையாக கூடியது. பணத்தைப் பசியாறிய பரத்தைச் சாமியார்—சாய்பாபா அங்கு வருகை தரவில்லையாம்!

எப்படி வள்ளீசு?வழிகாட்டும் ஆண்டவன் சட்டத்திற்கும் சவால் விடுகின்ருரோ? (ஒருவேளை இதுவும் ஆண்டவனின் திருவிளையாடல்களில் ஒன்ருே! நாமறியோம்.)

‘இந்த அற்ப மனிதர் இடும் சட்டங்களுக்கெல்லாம் யாம் அடிபணியமாட்டோம்’என்று ஆண்டவன் தன் ‘ஸ்ரேற்றஸ்’சைக் காப்பாற்ற இப்படிச் செய்தாரோ!

எது எப்படியிருந்தாலும் அற்பமானிடனிடம் அவதார புருசன் கைநீட்டி(?) பணம் பெற்றதும் ‘ஸ்ரேற்றஸ்’சுக்குக் குறைவுதான்.

இனி விடயத்தைக் கவனிப்போம். பக்தர்களைக்காக்கும் தொழிலை அவசர அவசரமாக செய்து கொண்டிருந்ததால் நீதிமன்றம் செல்ல அவகாசமில்லாமலும் இருந்திருக்குமோ யாரறிவார்.

எப்படியிருந்தாலும் நீதிமன்றத்திலும் ஒரு தோற்றமளித்திருக்கலாம்—இது ஒன்றும் இந்தச் செப்படி வித்தைக்காரனுக்குப் புதிதல்லவே!

புட்டர்பத்தியில் கணவன் ஒருவன் தன்னைச்சந்தித்துக் கொண்டிருக்கையிலேயே இலங்கையிலிருக்கும் அவன் மனைவிக்கு இரவில் — தனியான நேரம் பார்த்து காட்சியழித்த தெய்வத்திற்கு அருகே உள்ள நீதிமன்றம் துலைச்சுப்போச்சோ!

ஒருவேளை பெண்களுக்கு மட்டும்தான் — அதுவும் கணவனின்றித் தனியாயிருக்கும் வேளைகளில் மட்டும்தான் அவர் காட்சியழிப்பார் என்றிருக்கலாம். அப்படியாயின் இந்திய நீதித்துறையினருக்கு நாம் ஒரு ஆலோசனையைக் கூறுவோம்.

அதாவது நல்ல இளம், அழகுள்ள பெண்ணை நீதிபதியாக அமர்த்தி, அங்கு கடமையாற்றக் கூடிய ஏனையவர்களையும் பெண்களாகவே நியமித்துப்பார்த்தால் சிலவேளை விசயம் சரிவரும். இல்லாவிட்டால் ‘தொப்பி’ தான்.

இது தவறின் பெரிய பிரச்சனைகள் வரக்கூடும். நீதிமன்றத்திற்கு அவர் வராது விட—நீதிமன்றம் பிடிவிருந்து அனுப்ப—‘வாரண்ட்’டைக் கொடுக்கச் சென்றதும் கிருஸ்ணனின் வாரீசு திடீரென மறைய—வாரண்டே கொடுக்க முடியாத நிலையில் சட்டப்புத்தகங்களைச் சுருட்டி மூலையில் வீசிவிட்டு சும்மா இருக்க வேண்டியதுதான்.

எப்படியாவது ‘பகவான்’ நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப் பட்டுவிட்டாலும் அங்கு கடமை

யாற்றுவோர் (நீதிபதியுட்பட) முகத்திற்கு செலுலய்ட் தாளினு லான கவசம் அணிந்திருத்தல் முன்னெச்சரிக்கையான நடவடிக் கையாக இருக்கும். ஏனெனில் பகவான் திடீரென வீபூதியைத் தோற்றுவித்து (இது மட்டும் அவ ரால் முடியுமே!) மூஞ்சியிலடித்து விடுவர். அதனுல் நீதிபதி கண் களை மூடவும் அங்குள்ள தஸ்தா வேஜுகளை பகவான் மறையச் செய்துவிடுவார்.

சாய்பாபா பெரிய மகான்—அவர் கோட்டுக்கு வருவது முறை யல்ல—அவரது வீட்டிற்கே நீதி பதி சென்று விசாரணை நடத்த வேண்டும் என்று செப்படி வித் தைக் காரனின் சட்டத்தரணி நீதிபதியிடம் கேட்டதற்கு நீதி பதி சம்மதிக்க மறுத்துவிட்டா ராம். மகான் ஆனுலென்ன; மடா திபதியானுலென்ன சட்டத்தின் முன் எல்லோரும் சமமே! என்று திட்டவட்டமாக கூறியிருக்கின் ரூர்

திடமான போக்கிற்கு அவரை வாழ்த்துகின்ரேம்!

கட்டுப்பாடான, நெறியான வாழ்வை விட்டு, காவியுடுத்துச் சடைவளர்த்து வேடம்போடுப வர்கள் மீது எமக்கு எப்போதுமே நியாயமான ஐயம் உண்டு, ஏதோ உருட்டு, புரட்டு, கொள்ளையில் ஈடுபடுபவர்கள் என்பது எமது அனுபவம். வாழ்ந்து — வாழ்வில் ஏற்படும் சோதனைகளைத்— தாங்கிச் சமாளித்து—நாட்டைப் பூஞ்சோலையாக்கி மாண்டு போவ தற்கு மனத்துணிவு அற்று ஓடி ஒதுங்கி காவியில் தஞ்சம் புகுப வர்கள் நடத்துவது படுபாதக மான போலி வாழ்வே! இவர்கள் மனதில் கொழுந்துவிட்டெரியும் ஆசைகள் அனேகம்! அவற்றை அடைய அவர்கள் நாடும் வழி வகைகள் தான் நாடே அறிந்த தாயிற்றே!!

மழித்தலும் நீட்டலும்
வேண்டா—உலகம்

பழித்தது ஒழித்து விடின்.

—என்பது குறள்

டாக்டர் கோவூரிடம் இது பற்றிக்கேட்டதற்கு "கோயிலில் இருக்கவேண்டிய கடவுள் கோட் டுக்குப் போவது பற்றி என் வாழ் நாளில் இப்போதுதான் முதல் முறையாக கேள்விப் படுகிறேன்" என்ரூர்.

—விடுப்பர்

## சந்தா விபரம்

1 ஆண்டு ரூ 10-00
6 மாதம் ரூ 5-00
தனிப்பிரதி சதம் 85

அஞ்சல் செலவு தனி தனிப்பிரதிக்கு 85 சதம் பெறு மதியான அஞ்சல் தலை அனுப்ப வும்

முகவரி

பகுத்தறிவகம்,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

இம்முறை இடம்பெறுவதற் கென்று ஒதுக்கப்பட்ட பல விட யங்கள் இங்கு இடம்பெற முடிய வில்லை. அடுத்த இதழில் அவை கள் இடம்பெறும்.

—ஆசிரியர்குழு.

# எமது நம்பிக்கை

உங்கள் கையிலிருப்பது "பகுத்தறிவு" மூன்றுவது! இதழே!

பகுத்தறிவைத் தொடங்கும் நோக்கத்துடன் நாம் பல அச்சகங்களை நாடி விலைமதிப்பீடு போட்டுத்தரும்படி கேட்டோம். அப்போதெல்லாம் எமக்குப் பல சுவையான அனுபவங்கள் ஏற்பட்டன.

ஒரு அச்சக உரிமையாளர் "நீங்கள் புத்தகம் அடிக்கமாட்டியள், இந்தப் பேப்பர் தட்டுப்பாடு தெரியாதோ! விட்டுப் போட்டு ஏதேன் கல்வெட்டு, அழைப்பிதழ் எண்டால் வாருங்கோ அடிச்சுத்தாறம். விலை மதிப்பீடுபோடும் நேரம் எனக்கு வீண்" என்று கூறி எம்மை விரட்டியே விட்டார்.

அனேகமாக நாம் ஏறி இறங்கிய அச்சகங்கள் எல்லாம் ஒரு புத்தகத்தை ரூ.1-50க்கு அடித்துத் தருவதாகவே ஒப்புக்கொண்டன. பல ஆயிரம் பிரதிகளை அடித்தால் ரூ1-00 வீதம் தருவதாக ஒன்று இரண்டு அச்சகங்கள் ஒப்புக்கொண்டன.

இந்த நிலையில் எமது திட்டத்தையே மறுபரிசீலனை செய்ய நேரிட்டது. இத்துறையில் அனுபவமுள்ளவர்கள் கூறிய அறிவுரைகளும் எமது உற்சாகத்தைத் தடுப்பனவாகவே இருந்தன. எடுத்த நல்ல முயற்சியை விட்டுவிட விருப்பமற்ற நாம் முதல் இதழை யாழ்ப்பாணத்திலுள்ள அச்சகமொன்றில் அடித்து வெளியிட்டும் வைத்தோம்.

இந்தத் தாள் விலையிலா அடிப்பது? என்று வாயில் விரலை வைத்தவர்களுக்கெல்லாம் நாம் கூறிய பதில் "நாம் எதிர்காலத்தில் கொடுக்க வேண்டிவரக்கூடிய விலைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இப்போது தாள் நல்ல மலிவாகக் கிடைக்கிறது. இப்போது தொடங்க முடியாவிட்டால் இனிமேல் எப்போதும் தொடங்க முடியாது போய் விடும்" என்பதே! இது பச்சை உண்மையுமாகும்.

விளம்பரத்திற்காகசிலதொழிலதிபர்களை நம்பியிருந்து மயிலே மயிலே இறகு போடு என்ற கதையாகியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் சென்ற இரண்டு இதழ்களும் வெளிவந்தன. இன்றைய மட்டில் ஒரு இதழின் விலையை ரூ 1-00ஆக கூட்டவேண்டும். அல்லது இந்த இரண்டு இதழ்களுடன் இந்த மொட்டைக்கருக அனுமதிக்க வேண்டும்.

இந்த நிலையில் பகுத்தறிவுச் சமுதாயத்தைக் காணவிளையும் நீங்கள் தரும் நம்பிக்கை எம்மைப் பெருவியப்பில் ஆழ்த்துகிறது. நாம்எதிர்பாரத அளவுக்கு வாழ்த்துக்களும், அறிவுரைகளும் ஒவ்வொரு நாளும் எம்மை வந்து சேர்ந்த வண்ணமிருக்கின்றன. இன்றையசூழ்நிலையில் பகுத்தறிவு ஒரு உண்மையான தேவை என்று ஊக்கப்படுத்துபவர்கள்ஒருபுறம். "இப்படி ஒரு சஞ்சிகைக்காக

# கேள்விகளாயிரம் கேளுபாப்பா

க. சிவகாமி, மட்டுவில்.

கே—பகுத்தறிவு கட்சிச்சார் புள்ளதுபோல் தெரிகிறதே!

ப — ஆம். பகுத்தறியும் கட்சியைச் சார்ந்தது.

* * *

இ. குகானந்தன், திருநெல்வேலி.

கே— பெண் என்றால் பேயும் இரங்குமாமே! ஏன்?

ப — ஆண்பேயா? பெண் பேயா? என்று எழுதும். பதில் தரப்படும்.

* * *

புரட்சிப் பித்தன், சுன்னாகம்.

கே— இறைவனைப் படைத்தவன் மனிதனா?

ப-ஆம் நண்பரே சந்தேகம்ஏன்?

கே— மனிதனை மனிதனால் படைக்கமுடியுமா?

ப—மிருகத்தால் முடியாது.

* * *

எம். செல்வம், தெமோதர எஸ்ரேற்.

கே—ஓய் விடுப்பரே! கடவுளில் உமக்கு நம்பிக்கையில்லையா?

ப—நீர் எந்தக் கடவுளைக் குறிப்பிடுகிறீர்?

---

**உங்கள் கேள்விகளை அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புங்கள். ஒருவர் எத்தனை கேள்விகளையும் அனுப்பலாம்.**

---

காத்திருந்தோம். கிடைத்துவிட்டது'' என்று கடிதம் எழுதி அனுப்பும் மாணவர்களை — வருங்கால பகுத்தறிவுச் சமுதாயத்தைப் பார்த்து 'கட்டாது நிறுத்திவிட்டோம்' என்று கூறுவது பகுத்தறிவுக்கு பொருத்தமாகுமா? பகுத்தறிவுப் பசியோடு பலர் காத்திருக்கின்றனர் என்பதைத் தெரிந்துகொண்ட பின்பு எம் மனம் அதற்கு ஒப்பவில்லை.

உண்மை நிலையை உங்களுக்குத்தெரிவித்து இந்த இதழிலிருந்து தனிப்பிரதியின் விலையை 85 சதமாக உயர்த்த நேர்ந்துவிட்ட வருத்தந்தோய்ந்த உண்மையையும் கூறிவிடமுடிவுசெய்திருக்கின்றோம். ஆண்டுச் சந்தா ஏற்கெனவே செலுத்தியவர்கள் மொத்தமாக பத்து இதழ்களையே பெறுவார்கள்.

பகுத்தறிவுச்சமுதாயம்காண விழையும் நீங்கள் இந்த விலை உயர்வைப்பொருட்படுத்த மாட்டீர்கள் என்பதே எமது நம்பிக்கையாகும். —ஆசிரியர் குழு.

# கோவூர் கொடுக்கும் பதில்கள்

கேள்வி— 1 க. சண்முகநாதன், ஆவரங்கால், புத்தூர்.

மாந்திரீகர்கள் போடும் மை (அஞ்சனமை என்பது) யில் களவு போன விடயங்கள் பற்றிய உண்மைகள் வெளிப்படுத்துவது பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன? அப்படிக்களவு போன ஒரு விடயத்தையோ அல்லது வேறு எந்த ஒரு காரியத்தையோ அப்படித் தாங்கள் நிரூபித்துக்காட்ட முடியுமா?

பதில்— மனித உள்ளமானது தன் எண்ணத்தைத் தெரிவிக்கும் தன்மைவாய்ந்தது. ஒரு களவு நடப்பதைப்பற்றியோ, வேறு எந்த ஒரு சமூகத்தில் நடைபெறும் விடயத்தைப்பற்றியோ எப்போதும் அறிந்து—தெரிந்து அப்படியான விடயங்களைப்பற்றித் தனக்குள் ஒரு எண்ணத்தை வைத்திருக்கும் மனித உள்ளம் தனது சொந்த நம்பிக்கையையே மை பார்க்கும்போது வெளியிடுகிறது. அறிந்த சூழ்நிலையில் அஞ்சனம் பார்த்துச் சொல்லுகையில் அனேகமானவை சரியாக இருப்பதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. தெரியாத புதிய சூழல் பற்றி கூறுபவைகளில் பத்தில் ஒன்றோ இரண்டோ சரிவரலாம். இது பார்ப்பவருக்கு கிடைக்கும் எதிர்பாராத வெற்றியே!

ஒரு வெற்றிலையைக்காட்டி, மையைப்போட்டு அதனுள் பிள்ளையார் வருகுது, அநுமார் வருகுது பார் — வடிவாகப் —பார் என்று தன்னிலும் உயர்ந்த மதிப்புள்ள ஒருவர் சொல்லும் போது பார்ப்பவர் அக்கூற்றுக்களை முழுக்க முழுக்க நம்பி—சரியென மனதார ஏற்று கண்ணைவெட்டாமல் பார்க்கின்றார். அப்போது அவர் மனம் அதன்வயப்பட்டு அரை

---

என் அன்பு மகனே! இதுவரை காலமும் படித்தவர்கள் படிக்காதவர்கள் எல்லோரையும் என்னுடைய ஒரு சொல்லால் கட்டுப்படுத்தி இந்த ஊருக்கே பெரியவனாக வாழ்ந்து வந்தேன். இந்த 'பகுத்தறிவு' வந்த பின்னலை என்னுடைய செல்வாக்கு அழிந்துகொண்டே வருகிறது. இனி வாழ்ந்தும் பயனில்லை. மனிதர்களின் கூழ்பானைக்குள்ளேயே விழுந்து தற்கொலை செய்யப்போகின்றேன்.

அப்படிநான் இறந்துவிட்டதைக்கண்ட மனிதன் 'குறைபாடு' வந்துவிட்டதாக எண்ணி 'சாந்தி' செய்தானாயின் நீ அவனை தொடர்ந்தும் கட்டுப்படுத்தி வைக்கலாம்.

இல்லையென்றால் நீயும் தற்கொலைசெய்து கொள்வது நல்லது.

இப்படிக்கு
அன்பான —பல்லி

---

குறையாக மயக்க நிலை (HYPNOTIZED)யடைகிறது. இப்போது ஏனையோர் கேட்பவையும், தான் நினைப்பவையும் கலந்து அங்கே தெரிவதில் வியப்பேது?

குறிப்பு— ஏமாற்றிப் பிழைக்கும் வித்தைகளில் இதுவும் ஒன்றே! ஆனால் பார்ப்பவர் தனக்குத் தெரிவதைத்தான் கூறுகிறார். அவர் பொய் கூறுவதாக கொள்வது தவறு. ஆயினும் நிகழ்ச்சிகள் உண்மை நிகழ்ச்சிகளல்லாதிருப்பதையிட்டு நாமே சிந்திக்கவேண்டும்.

**கேள்வி — 2** நீங்கள் ஒருவருக்கு ஹிப்னோடைஸ் பரீட்சை நடத்தும்போது உபயோகிக்கும் வார்த்தைகளுக்குப்பெயரென்ன? அதற்குப் பதிலாக நான்தரும் வார்த்தைகளை உபயோகிப்பீர்களா? விளக்கம் தேவை.

**பதில் —** ஒரு டாக்டரிடம் போய் 'நீர் நோயாளிகளுக்கு கொடுக்கும் மருந்துகளுக்குப் பெயரென்ன? அதற்குப் பதிலாக நான்தரும் மருந்து வகைகளை உபயோகிப்பீரா? எனக்கேட்டுப் பாரும்!

**கேள்வி — 3** மூளைக்கோளாறு நரம்பு சம்பந்தமான நோயாளிகளுக்கும் சித்த சுவாதீனமுடையோர்க்கும் அமவாசை, பௌர்ணமி ஆகிய தினங்களில் நோய் அதிகரிப்பதேன்?

**பதில் —** அங்கொடை, முல்லேரியா போன்ற இடங்களிலுள்ள மனநோய் வைத்திய சாலைகளில் நடத்திய சோதனைகளில் உமது நம்பிக்கை பொய்யென திருபிக்கப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் மக்கள் இதை நம்புகிறார்கள். சூரியனோ சந்திரனோ உயிரினங்களின் உள்ளங்களில் தமது செல்வாக்கைப் பாவிக்க முடிவதில்லையே!

**கேள்வி — 4** 4-2-74ந் திகதி நாளேடான தினகரனில் கோவூருக்குப் பகிரங்கச்சவால் என்ற தலைப்பில் பருத்தித்துறை வாசியொருவர் அறிக்கை விட்டிருந்தார். அதற்குரிய வெட்டுத் துண்டைத் தங்களிடம் சேர்ப்பித்திருந்தேன். இதுவரை தங்கள் பதில் வெளியாகவில்லை. அதற்குரிய காரணம் என்ன?

**பதில்—** உமது வெட்டுத் துண்டு கிடைத்த சில நாட்களுக்குள்ளேயே உரிய பதிலை நான் 'தினகரனுக்கு' அனுப்பிவிட்டேன். இங்கே மீண்டுமொரு முறை தருகின்றேன்.

அர்த்தமற்று உளறுபவர்களின் பேச்சுக்குப் பதில் கூற எழுபத்தாறு வயதை அடைந்து விட்ட முதியவனை என்னால் வந்துபோக இயலாது. இருப்பினும் 'மனித உடலுக்கு அபாயத்தை உண்டுபண்ண முடியாத எந்த ஒரு பொருளையும் நிறையிலும் எடுக்கக் கூடியதாயிருப்பின் (தேவையேற்படின் சோதனை செய்துபார்த்த பின்) எடுத்துத் தருவதற்கென ஒரு இளைஞரை அனுப்பிவைக்கின்றேன்.

அதற்கு முன்னர் ரூ. 250/-ஐ என்னிடம் நீங்கள் ஒப்படைக்க வேண்டும். நாம் தோற்றுவிட்டாலன்றி அப்பணம் எமக்கே உரியதாக்கப்படும்.

காரமிக்க —
சுவையான —

மதியபோசனம், காலை, மாலை சிற்றுண்டிவகைகள்,
தேனீர், குளிர்பானங்கள் முதலியனவற்றிற்கு

**KALPANA CAFE**
**கல்பனா கபே**
( சைவ கோட்டல் )

**விசேட ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்**

இல. 43, முதலிகே வீதி,
கொழும்பு—1.

**யாழ் நகரில்... 26,27,-10-74**

டாக்டர் கோவூரின்...

# நம்பிக்கை

(டாக்டர் கோவூரிடம் சிகிச்சை பெற்ற ஓர்
இளம் பெண்ணின் உண்மையான கதை)

**இடம்: வீரசிங்கம் மண்டபம்**

நாடகக் காட்சிகளின்போது டாக்டர் கோவூர் தம்பதிகள்
அதிதியாகக் கலந்து சிறப்பிப்பார்கள்.

# 7 ... வெற்றிவாரம்

...ழுத்து திரைப்பட உலகில் சாதனைக்குமேல் சாதனைகளை
ந... வருகிறாள்
எ... சாமியின்

# சுசீ



சிலோன் தியேட்டர்சாரின் 17 திரைகளில்
காட்சியளிக்கிறாள் "சுசீ"

பகுத்தறிவியக்கத்தின் சார்பில், திருநெல்வேலி மேற்கு, அம்ம... வீதியில் வசிக்கும் சி. சின்னத்துரை அவர்களால் "சுதந்திரன்" ...சகத்தில் அச்சிட்டு வெளியிட...ட்டது.